1. முதல் ஐந்து வாக்கிய ரத்தினங்கள் — 16

2. மறை பொருட்கள் — 25

3. இறைவனின் முதல் உத்தரவுகள் — 33

4. வித்திலிருந்து விருட்சம் — 40

5. அன்றாட வாழ்க்கை — 50

6. முக்கியமான சில ஹதீஸ்கள் — 65

7. சமுதாயம் தழைத்தோங்க — 78

## 1. முதல் ஐந்து வாக்கிய ரத்தினங்கள்

திருக் குர்ஆனின் பீடிகையாக இருப்பது ''அல்-பாத்திஹா'' எனும் ஸூரா. முற்காலத்திய இஸ்லாமிய அறிஞர்கள் எந்தக் குர்ஆன் ஹதீஸ் விளக்கத்தை ஆரம்பிக்கும் முன்னும் ''அல்-பாத்திஹா'' என்பார்கள். அனைவரும் சேர்ந்து ஸூரா பாத்திஹாவை ஓதுவார்கள். பிறகு உபந்யாசம் நடைபெறும். குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஞானத்தின் அடிப்படைகளைக் கொண்டது ஸூரா பாத்திஹா. கலிமாவைப் பற்றியும் பிறகு தொழுகை முதலியன பற்றியும் எழுதுமுன் பாத்திஹாவின் சுருக்கமான கருத்துரை இன்றியமையாதது.

அறிந்தவன் இறைவன் ஒருவனே. அரபியில் அறிந்தவன் என்பதற்கு ''ஆலம்'' என்று பெயர். ஆண்டவனால் படைக்கப்பட்டு அவன் அறிந்துள்ள பொருள் அணுவாயினும் அகிலமாயினும் அதற்கு ''ஆலம்'' என்று கூறலாம். ''ஆலமின்'' என்பது ''ஆலம்'' என்பதற்குப் பன்மை.

அணுவாயினும் அகிலமாயினும் ''ஆலம்''கள் தாமாகவே உண்டானவைகளுமல்ல; தம் இஷ்டத்துக்கு உண்



டாகி நடத்து கொண்டிருப்பவைகளுமல்ல. சிருஷ்டித்தவன் உண்டு; அவன் சிருஷ்டித்தவன் மட்டுமல்ல; சம்ரட்சணை செய்து கொண்டிருப்பவனுமாவான். உண்டாக்கிய பொருள்களை அவன் அறிந்துள்ள குறிக்கோள்களுடன் உண்டாக்கி, அவைகளை அந்தக் குறிக்கோளின்படி நடக்கச் செய்து கொண்டிருப்பவனாகவும் இருக்கிறான். சிருஷ்டித்து அவைகளை நடத்தாட்டிக் கொண்டிருப்பவனுக்கு அரபியில் ''ரப்'' என்று பெயர்.

''ரப்புல் ஆலமீன்'' எனின், சர்வ ஆலம்களையும் சிருஷ்டித்தவன், சம்ரட்சித்துக் கொண்டிருப்பவன். நடத்தாட்டிக் கொண்டிருப்பவன் என்று பொருள்.

அப் பரம்பொருளுக்குரிய திருநாமங்கள் பல. அவைகளைச் சொல்லிக் கொடுத்தவனும் அவனே. அவனை அவன் காட்டிக் கொடுத்த அளவுக்கு அதிகம் யாரால் அறிய முடியும்? ''அல்லாஹ்'' என்ற நாம் தன்னுடைய நாமங்களில் சிரேஷ்டமானது என்பதைத் தனது திருத்தூதர் வழியாகக் கற்றுக் கொடுத்தவனும் அவனே. ''லில்லாஹி'' என்றால் அரபியில் ''அல்லாஹ்வுக்கு'' என்பது பொருள்.

'அல்ஹம்து' என்றால் 'புகழ் அனைத்தும்' என்று பொருள். புகழ் என்றால் என்ன? நாவில் நறுமணத்துடன் மலரும் புஷ்பம்தான் புகழ் என்பது அல்லவா? மனிதனுக்கு ஆண்டவன் நாவை மட்டும் அளித்தான் என்றில்லை. சடதத்துவ உடலும் அதில் மறைந்துள்ளசூட்சும உடலும் அவைகளில் உள்ள நாவு, செவி, கண்கள் முதலிய உறுப்புகளும் உண்டு. நாவில் மலரக்கூடிய ஹம்து எனும் புஷ்பமும் உண்டு. 'அல்ஹம்து' எனும் பதத்தின் அட்சரங்கள் ஐந்து. மனிதனுடைய கரத்தில் உள்ள விரல்கள் ஐந்து. மானிடன் ஐந்து நிறமுள்ள, பஞ்சாட்சரம் உள்ள, ஒரு பொருளாக இருக்கிறான். அல்ஹம்து எனும் பதத்தில்

உள்ள பஞ்சாட்சரங்கள் மனிதனுடைய சகலத்தையும் குறிப்பிடுபவை. அல்ஹம்து என்றால் வாய் மட்டும் அல்லாஹ்வைப்புகழ, இதர உறுப்புக்கள் அல்லாஹ்வுடைய உத்தரவை மீறிக் கொண்டிருப்பதன்று. நாவு மட்டும் அல்லாஹ்வின் புகழ்பாட, அனுஷ்டானங்கள் அவனுடைய கட்டளைகளை மீறுவதாக இருப்பதற்கு பெயர் அன்று. நமது நாவும் நாவினால் செய்யக்கூடிய புகழும் நமது கண்களும், செவிகளும், சகல உறுப்புகளும், வாழ்நாள் முழுவதும் அல்லாஹ்வுக்கே அர்ப்பணம் என்பதற்குதான், 'அல்ஹம்து-லில்லாஹி ரப்பில்-ஆலமீன்' என்பது.

## 2

ஆண்டவனுடைய கோடானு கோடி படைப்புகளில் அறிவற்றவைகளும் உண்டு. சொன்னதை மட்டும் அறிந்து கொண்டு, சொன்னபடி செய்து வரும் மலக்குகளும் உண்டு. ஒரு துளி 'அறிவு' அளிக்கப்பட்டு, பாகுபடுத்தும் சக்தி, சீர்தூக்கிப் பார்க்கும் சக்தி, எது சரி, எது சரியல்ல வென்பதை அறிந்து, வேண்டுமானால சரியாக இருந்து அதன் நற்பயன்களை அனுபவித்துக் கொள்ளவும், வேண்டுமானால் சரியற்ற நிலையில் இருந்து அதன் தீய பலன்களை அனுபவித்துக் கொள்ளவும் உரிமை அளிக்கப்பட்டுள்ள சடதத்துவ வடிவு அற்ற சூட்சும உடல் மட்டுமுள்ள ஜின்களுமுண்டு. சடதத்துவ உடலுடன் சடதத்துவ உலகில் தோன்றி இங்கு ஜீவியத்தை நடத்திவிட்டு ஆன்ம லோகத்துக்கு இவ்வுலகில் தெய்வ நன்மை தீமையின் வினைப் பயன்களுடன் செல்ல வேண்டியிருக்கும் மானிடரும் உண்டு. நபிகள் நாயகம் (ஸல்) மூலம் அளிக்கப்பட்ட வேதம் ஜின்களுக்கும் மானிடருக்குமென்று அளிக்கப் பட்டது.

மானிடராகிய நாம் நம் இஷ்டத்துக்குப் பிறக்கவில்லை; நம்முடைய இறப்பும் நம் இஷ்டத்துக்குக் கட்டுப்



பட்ட விஷயமன்று. நாம் பிறந்த இடமும் நேரமும் நம் இஷ்டப்படி அமைந்தவையன்று. எனினும் ''ஆலிம்'' (அறிவு உள்ளவன்) ஆகிய இறைவன் நமக்கு அறியும் சக்தியையும் ஓரளவுக்கு சுதந்திரத்தையும் கொடுத்திருக்கிறான். பூமியைக் கவனியுங்கள்! ஒரு வினாடியும் அயராது சதா சுழன்று கொண்டிருக்கிறது. எந்தச் சடதத்துவப் பொருளாயினும் அது ஓய்வின்றி, உணர்வின்றி, அறிவின்றி, தன் தன் வேலையைச் சதா செய்து கொண்டிருக்கிறது. ஜின்னுகளுக்கும் மனிதருக்கும் மட்டும் அறிவை உபயோகித்து நல்ல வழியில் செல்லவும் உரிமை உண்டு. உழைக்கும் உரிமையும் உண்டு. சோம்பேறியாக இருக்கவும் உரிமை உண்டு. அவ்வாறு சுதந்தரம் இருப்பினும், செய்யும் தவறுகளின் தீய பயன்களைப் பட்டுத் தொலைக்கவும் வேண்டி இருக்கிறது. இவ்வுலகில் நமக்குத் தெரியும் வினைப் பயன்களும் உண்டு. இறந்ததுடன் விஷயம் முடிந்து விடுகிறதா? அதுவும் இல்லை. இவ்வுலக வாழ்வின் நன்மை தீமைகள் மரணத்துக்குப் பின் உள்ள வாழ்க்கையிலும் நம்மைப் பாதிப்பதற்கு இருக்கின்றன. அறியாக் குறையால் செய்துவிடும் தவறுகளுக்கெல்லாம் இம்மையிலும் மறுமையிலும் பட்டுத் தொலைப்பதென்றால் முடியுமா? இந்தக் கேள்விக்குத் தனதுத் திருத்தூதா (ஸல்) அவர்கள் மூலம் இறைவன் அளித்துள்ள பதில் என்ன? அறியக் கூடிய சக்தி இருந்தும் அறியாமல் இருப்பது குற்றம். அறிந்தபின், அறிந்தபடி நடக்கத் தவறுவது குற்றம். அறிவதற்கு முன் செய்திருக்கும் குற்றங்கள் மன்னித்து அருளப்படக் கூடியதுவை. அறிந்தும் முயன்றும், தவறக்கூடாதென்ற முழு மனம் இருந்தும், இயற்கையில் உள்ள பலஹீனங்களில் ஏற்படும் தவறுகளும் மன்னித்து அருளப்படக் கூடியவையே.

இன்ன செய்தால் இன்ன பயன் என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளதற்குத் ''தக்தீர்'' என்று சொல்வார்கள். ''தக்தீர்'' எனும் பதம் ''கதர'' (அளவு, நிர்ணயித்தல்) என்ற மூலத்திலிருந்து பிறந்தது. 'குதுரத்து' என்பதும்

அதே மூலத்திலிருந்து பிறந்த பதம்தான். ஆயினும், சகல அளவுகளையும், சட்டங்களையும் நிர்ணயித்த இறைவன், நாடினால் இவைகளை மாற்ற முடியும் அல்லவா? மனிதன் செய்த ஒரு தவறுக்குத் தக்தீர் கணிதப்படி அவன் அடைய வேண்டிய தண்டனை ஒன்றாக இருக்கலாம்; எனினும், இறைவன் நாடினால் மன்னித்து விடக் கூடியவன்; அவன் மன்னித்து அருளும் பொழுது, தண்டனையும் வினைப்பயனும் இல்லாது போய்விடக் கூடியனவாக இருக்கின்றன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் உலகுக்குக் கிடைத்த கருணை மயமாகிய செய்தி இதுவே. இதனாலேயே அவர்களை ''ரஹ்மத்துன்-லில்-ஆலமீன்'' (அகிலங்களுக்கு அனுப்பப்பட்ட கருணை) என்று அழைக்கிறோம். அவர்கள் அல்லாஹ்வின் தனிப் பெரும் நாமமாகிய 'அல்லாஹ்' என்ற நாமத்துடன், அவனது கருணை மயத்தைக் காட்டும் இரு திரு நாமங்களான ''ரஹ்மான்'', ''ரஹீம்'' (அர்ரஹ்மா-னிர்ரஹீம்) என்ற இரு நாமங்களையும் படித்துக் கொடுத்துள்ளார்கள்.

## 3

அறிவு அமானிதமாகக் கொடுக்கப்பட்டுள்ள மானிடருக்குச் சுதந்திரத்துடன் இயன்ற அளவுக்கு நன்மை தீமைகளைத் தேடிக்கொள்ளும் உரிமையை அளித்துள்ள நாயன், இறுதியில் நீதித் தீர்ப்பு அளித்து, மன்னிக்கக் கூடியவற்றை மன்னித்து, நன்மைக்கு நன்மையான கூலிகளையும் தீமைக்குரிய தண்டனைகளையும் அளிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஒரு காலமும் உண்டு. அரபியில் ''யவ்ம்'' என்றால் ஒரு நாளுக்கும் சொல்லலாம். ''தீன்'' என்றால் தீர்ப்பு, நீதி, சட்டம் என்ற பொருள்கள் உண்டு. இறைவன் நீதித் தீர்ப்பு அளிக்கும் காலம், அவனது நீதி மட்டும் நடைபெறும் காலம், அவனது சட்டம்மட்டும் நிலை பெறும் காலம் உண்டு. இதைக் கியாமத் நாள் என்றும், மஹ்ஷர் நாள் என்றும் அழைப்பார்கள். இன்று நான் பெரியவன், நீ பெரியவன் என்று ஜின்னுகளும் மனிதரும் சொல்லிக் கொண்டு தலைவிரித்தாட இறைவன் அனுமதித்திருக்கிறான். தங்கள் தங்கள் சொந்த ஆட்சிகளையும், குடும்ப ஆட்சிகளையும், தேச ஆட்சிகளையும் நடத்த விட்டுக் கொடுத்திருக்கிறான். எனினும், ஆட்சி உண்மையில் அவனுக்கே உரியது. ''யவ்மித்தீன்'' எனும் தீனுடைய சகாப்தத்தில்—நாளில்—அவனது ஆட்சி மட்டுமே நிலை பெற்று இருக்கும். அந்நாளின். காலத்தின் சகாப்தத்தின் எஜமானன் அல்லாஹ் ஒருவனே! ''மாலிக்'' என்றால் எஜமான் என்பது பொருள். (மாலிக்கி-யௌமித்தீன்)

## 4

''ஸூரா பாத்திஹாவில்'' உள்ள வசனங்கள் ஏழு. இவற்றுள் மேலே தந்துள்ள மூன்று ஆயத்துக்களும் தெய்வ தியானங்களைக் கொண்டவை. இத்தகைய தியானத்துடன், முஸ்லீம்கள் கருணாகரனாகிய எஜமானனிடம் செய்யும் உறுதிப்பாட்டையும் பிரதிக்ஞைகளையும் கொண்டதாக இருக்கிறது நான்காவது ஆயத்து.

இவ்வாறு ஆண்டவனுக்கு மட்டும் சொந்தமான அடியார்களாக மானிடர் வாழ்க்கை நடத்த ஆரம்பித்தால், அவர்களை எஜமானாகிய ஆண்டவன் விசேஷமாகக் கவனிப்பவனாகவும், அவர்களுக்கு வேண்டிய சகல ஆக்கங்களையும் ஊக்கத்தையும் அளிப்பவனாகவும் இருக்கின்றான். அவனையும் மறந்து அவனுடைய உத்தரவுகளையும் கவனியாது தலைவிரித்தாடிக் கொள்வதற்கு அவன் ஒரு குறிப்பிட்ட ஆயுள்வரை சுதந்திரம் அளித்து பின்னால் நீதித் தீர்ப்புச் சமயத்தில் தண்டனை பெற இவ்

டமானால் இப்பொழுது எப்படியும் கூத்தாடிக் கொள்ளலாமென்று விட்டிருப்பினும், நாம் அச் சுதந்திரத்தைத் தூக்கி எறிந்து விட்டு, அவனுக்கு மட்டும் சொந்தமான அடிமைகளாக இருந்து அவனுடைய உத்தரவுகளின்படி நடப்பதை ஒரே லட்சியமாகக் கொண்டுவிடும் பொழுது, எஜமானனாகிய அவன் நமக்குரிய விசேஷ உதவிகளை அளிக்கமாட்டானா? அவனுக்குச் சொந்தமானவர்கள் என்றால், அவனுக்கு மட்டும் சொந்தமானவர்களாகிவிட வேண்டும். நாவால் ஒன்று கூறிக்கொண்டு செய்கையில் வேறாக இருக்கக் கூடாது, அங்ஙனமே, அவனுடைய விஷேச உதவி வேண்டுமாயின், அவனிடம் மட்டும் உதவி கேட்பவர்களாகவும், அவனிடத்திலிருந்து மட்டும் உதவியை எதிர்பார்ப்பவர்களாகவும் ஆக வேண்டும், அங்ஙனம், அவனுக்கு மட்டும் சொந்தமான அடிமையாக இருந்து அவனுடைய உத்தரவுகளுக்கெல்லாம் கீழ்ப்படிய தயாராக இருப்பதாகவும், உலகில் ஷரீஅத் அனுமதிப்படி கொடுக்கல் வாங்கல் நடத்தினாலும் நாம் உண்மையில் எதிர்பார்ப்பது ஆண்டவனின் உதவி மட்டுமே என்ற பிரதிக்ஞையை முஸ்லீம்களாகிய நாம், ''இய்யாக்க நஃபுது-வ-இய்யாக்க-நஸ்தஈன்'' என்று கூறும்பொழுது சொல்கிறோம். (இய்யாக்க—உன்னையே; நஸ்தயீன்—உதவி தேடுகிறோம்.)

## 5

''ஸூரா பாத்திஹாவில்'' சத்தியப் பிரதிக்ஞையுள்ள நான்காவது ஆயத்துக்குப்பின், பிரார்த்தனையுள்ள ஓர் ஆயத்தும், அதன் விரிவுரையுள்ள ஈராயத்துக்களும் இருக்கின்றன.

இறைவனின் உதவியை ''இய்யாக்க-நஸ்தஈன்'' எனும் சொற்றொடரில் கேட்பதற்கு அர்த்தம், நம்முடைய எல்லாக் காரியங்களையும் இறைவனே செய்ய



வேண்டும் என்பதன்று. அவன் ஏற்கனவே அளித்துள்ளவைகளையும் நாம் மறந்துவிடக் கூடாது. தண்ணீர் வேண்டுமாயின், ஆண்டவனே புதிதாக நமக்கென்று ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வானத்திலிருந்து இறக்கிக் கொடுக்க வேண்டும் என்பதன்று; தண்ணீரை அவன் சிருஷ்டித்து அது எங்கு இருக்கிறதென்று அறியக் கூடிய அறிவையும் கொடுத்திருக்கிறான். கொடுத்தவற்றை மறந்துவிட்டு, அவற்றையே திரும்பக் கேட்பது, கொடுத்த இறைவனைப் பரிகசிப்பதாகுமல்லவா? எனினும், தாயார் ஹாஜிரா தண்ணீர் இல்லா இடத்தில் தண்ணீருக்கு வாடிய நிலைமை வந்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போதும் நம்பிக்கை இழக்காது, தாயார் ஹாஜரா பாலைவனத்தில் ஏழு தடவை ஓடி அலைந்தது போல் நாமும் முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் 'ஜம் ஜம்' கிணற்றைத் தாயார் ஹாஜிராவுக்காகப் பொங்க வைத்த இறைவன், நமக்கு இறுதி உதவி செய்வதற்கு இருக்கிறான். ஷரீஅத்தின் உத்தரவுப்படி நாம் பிறருக்குத் தொண்டு செய்ய நேரிடலாம்; எனினும், ஆண்டவனுடைய ஷரீஅத் அனுமதிப்பதால் அங்ஙனம் செய்வோமேயல்லாது வேறன்று. எனினும், நமது மனத்தில் நாம் ஆண்டவனுடைய தொண்டர்கள் மட்டுமே. ஆண்டவனுக்கு மட்டும் சொந்தமானவர்கள் என்ற எண்ணம் உறுதியாக இருக்க வேண்டும். ஷரீஅத்தின் உத்தரவுப்படி, பெற்றோர்களிடமும், சகோதரர்களிடமும், நண்பர்களிடமும் உதவி கேட்கலாம்; அவ்வாறு கேட்பது ஆண்டவன் அனுமதித்திருப்பதாலேயே என்ற உணர்வு வேண்டும். மற்றவர்கள் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று முஸ்லிம் நினைக்கவே மாட்டான். அவனுடைய அசல் நம்பிக்கை ஆண்டவன் மீது மட்டுமே. ஏற்கனவே அவன் சிருஷ்டித்துள்ளவற்றின் வழியாக உதவி கிடைக்கவும் முடியும்; தேவைப்படின் சிருஷ்டிகளைக் கொண்டு உதவி அளிப்பதும் இறைவனுக்கு முடியாத காரியமன்று.

ஆகையால், இறுதி உதவியை, அசல் நம்பிக்கையை, அவன் மீது மட்டும் நாம் வைத்திருப்பினும், அவன் நமக்கு கொடுத்த சக்திகளையும் சாதனங்களையும் முழுப் பிரயோகம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வாறு முயற்சிகள் செய்வதில் நமக்கு அவன் கொடுத்துள்ள அறிவையும் முற்றிலும் உபயோகிக்கக் கடமைப்பட்டுள்ளோம். எனினும், இறுதி உதவியையும், நம்முடைய அறிவுக்கும் சக்திக்கும் புறம்பான சந்தர்ப்பங்களில் அவனுடைய நேர் முகமான உதவியையும் எதிர்பார்ப்பது போல், நமது அறிவுக்கெட்டாத விஷயங்களில் அவனுடைய அறிவுச்சுடரால் வழிகாட்டப் பெறவும் விரும்புகிறோம். இக்கருத்துடனேயே ஸூரா பாத்திஹாவின் ஐந்தாவது ஆயத்தில் உள்ள பிரார்த்தனையைச் செய்கிறோம். (இஹ்தி நஸ்ஸிராத்தல்-முஸ்த்தகீம்)

(இஹ்தினா—நீ எங்களுக்கு வழிகாட்டி அருளுவாய்; ஸிராத்—வழி; முஸ்த்தகீம்—சரியான, சுருக்கமான)

நான் ஓர் ஊருக்குச் செல்ல வேண்டியதிருக்கிறது, இருந்து கொண்டே, "அந்த ஊர் செல்ல விரும்புகிறேன். அங்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவாயாக" என்று அரபியில் உச்சாடனம் செய்து கொண்டு, அந்த உச்சாடனத்தை இத்தனை தடவை சொல்ல வேண்டுமென்று நினைத்துக்கொண்டு, தஸ்பீஹ் மணியை உருட்டிக் கொண்டிருந்தால் முடியுமா? முதலில் அதற்குரிய பிரயாண வழியை அறிய வேண்டும். வழிப் பயணத்துக்குரிய முயற்சிகளைச் செய்ய வேண்டும். பிறகு, அந்த வழியில் செல்ல வேண்டும். இந்த முறையில் என்னுடைய அறிவையும் என்னிடம் உள்ள சாதனத்தையும் உபயோகித்து நான் புறப்பட்ட பிறகு, வழியில் எனக்குத் தெரியாத ஓர் ஆபத்து மறைந்து இருக்கலாம். என்றாலும், நான் எந்த இறைவனுக்குச் சொந்தமானவனோ அந்த இறைவனுக்கு தெரியுமல்லவா! நான் உண்மையிலேயே அந்த இறைவனுக்குச் சொந்தமானவனாக இருந்து, அவனிடம் 'இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்த்தகீம்' என்று பிரார்த்தனை செய்பவனாக இருப்பின், எனக்குக் கனவில் எச்சரிக்கை ஏற்படலாம். அல்லது, நான் செல்லும் மோட்டார், வழியில் கெட்டுப்போய், பயணம் சுணங்கி, ஆபத்து இருந்த இடத்தில் எந்த நேரத்துக்கு ஆபத்து இருந்ததோ அந்த நேரம் கடந்து அந்த வழியில் எனது வண்டியைச் செல்லுமாறு செய்வதற்கு இறைவனுக்கு முடியாதா? இஹ்தினா என்று நாம் கேட்பதில் எத்தகைய வழி காட்டப்படுவதற்காகப் பிரார்த்திக்குமாறு நபிகள் நாயகம் (ஸல்) நமக்கு கற்பித்துக் கொடுத்திருக்கிறார்களோ அதற்கு ஒரு சிறிய உபமானம் இது.



தப்ஸீர் எழுதுவது இந்நூலின் நோக்கமன்று. எனினும் எதையும் பாத்திஹாவுடன் ஆரம்பிப்பது வழக்கம் என்ற முறையில் ஸூரா பாத்திஹாவின் ஆயத்துக்கள் ஏழில் முதல் ஐந்தைச் சொற்பமான கருத்துரையுடன் முதல் அத்தியாயமாகக் கூறி முடிக்கிறேன்.

## 2. மறை பொருட்கள்

திருக்குர்ஆன் என்றால் என்ன? இதர நூல்களைப் போல் தாளில் எழுத்துக்களைக் கொண்ட நூல் என்றா நினைக்கிறீர்கள்? அன்று அவ்வாறு நினைப்பவர் குர்ஆன் என்பது என்னவென்பதை உணரவில்லை.

பல்-ஹுவ குர் ஆனும்-மஜீத், பீ லௌஹிம்-மஹ்பூல்

எந்த உத்தரவுகளை ஆண்டவன் பிறப்பித்து அவைகளைக் கொண்டு விதிவசப்பட்டோலையாகிய 'லௌஹுல் மஹ்பூல்' என்பது நிறைந்ததோ, எந்த உத்தரவுகளால் படைப்பும் இயற்கையும் உண்டாயினவோ, அந்த உத்தரவுகள் படைப்பின் இரகசியங்களை வெளிப்படுத்துபவை. படைப்புக்குரிய சட்ட திட்டங்களாக

இருப்பவை. இறைவன் அறிவுடன் சிருஷ்டித்த மானிட ஜன்மத்துக்கு தனது சிருஷ்டியின் இரகசியங்களையும், இயற்கைகளையும், சிருஷ்டி என்ற முறையில் இன்றியமையாத சட்ட திட்டங்களையும் அளிக்க விரும்பினான். எனவே, சம்பூர்ண சிருஷ்டியாக முஹம்மது (ஸல்) அவர்களைத் தோற்றுவித்து அவர்களிடம் தனது உத்தரவுகளைக் கொடுத்தருளினான்.

லௌஹுல்மஹ்பூல் எனும் பலகையில் எதிரொலித்துகொண்டிருக்கும் அத்துணை தெய்வ உத்தரவுகளையும் தன்னுள் மறைத்து வைத்திருப்பதாகக் குர்ஆன் ஷரீப் விளங்குகிறது. நமது கையில் உள்ள குர்ஆன் எனும் நூல், வெறும் நூல் அன்று. அதில் ஓர் உச்சரிப்பும் ஒரு ஸேரும் அழியாது காப்பாற்றப்பட்டு வந்துள்ள ஸ்லோகங்களில், லௌஹுல் மஹ்பூலில் உள்ள எழுத்துக்களே மறைந்து கிடக்கின்றன.

நம்மிடம் உள்ள குர்ஆன் கோவையில் ஸூரா பாத்திஹாவுக்குப் பின் இருக்கும் ஸூரா 'பகரா' வில், ''அலிப் லாம் மீம்'' என்று குறிப்பிடப்பட்டிருப்பது இதையே காட்டுகிறது. அலிப், லாம், மீம்! இவற்றுள் 'அலிப்' தனியாக இருப்பதையும், லாமும் மீமும் சேர்ந்திருப்பதையும் கவனியுங்கள். 'லாம்' என்பது ''லௌஹ்'' என்பதன் முதல் எழுத்து, 'மீம்' என்பது 'மஹ்பூல்' என்பதன் முதல் எழுத்து.

விதிவசம் எழுதப்பட்டுள்ள பட்டோலை என வர்ணிக்கப்பட்ட 'தக்தீர்' மட்டும் இல்லை; இதே தக்திரை நிர்ணயித்த இறைவன், நாடும் பட்சத்தில் எழுதியவற்றை அழித்து விடும் சக்தியும், எழுதியவற்றை அதிகப்படுத்தக்கூடிய சக்தியும் உள்ளவன் அவனுடைய இந்தச் சக்தியை-லௌஹுல் மஹ்பூல் எனும் ஏட்டின் உற்பத்தி பீடம் என்று—''உல்முல்-கிதாப்'' என்று குர்ஆனில் வர்ணிக்கப்



பட்டிருக்கிறது. 'உம்முல் கிதாப்' எனும் பதத்தின் முதல் எழுத்து 'அலிப்' அல்லவா?

ஆகையால் பாத்திஹா ஓதிய பின், அலிப்-லாம்-மீம் என்று நாம் உச்சரிக்கும் பொழுது, நமது ஞாபகத்துக்குக் கொண்டுவர வேண்டியது 'உம்முல் கிதாப்' எனும், ஆண்டவனின் விசேஷ உத்தரவும், அவனுடைய விசேஷ உத்தரவுக்குக் கட்டுப்பட்ட உத்தரவுகளைக் கொண்டு எழுதப்பட்ட புத்தகமாகிய லௌஹுல் மஹ்பூலும் ஆகும். விதிவசத்தை (தக்தீர்) மாற்றி அருளக்கூடியவன், தெரியாமல் செய்துவிட்ட தவறுகளின் வினைப்பயன்களை அழித்துவிடக் கூடியவன் உண்டு என்பதையும் அவன் விதித்துள்ள தக்தீரும் உண்டு என்பதையும் மனதில் கொண்டு வருபவைகளாக அலிப், லாம், மீம் என்ற மூவட்சரங்களும் நம் மனதில் கொண்டு வருவது, அந்த எழுத்தை—அந்தப் புத்தகத்தை—நினைத்தால் புதிதாக ஆண்டவன் எழுதக்கூடிய எழுத்தையும், எழுதப்பட்டுள்ள தக்தீர் எனும் லௌஹுல் மஹ்பூல் எழுத்தையும், ஆகையால் அடுத்த ஆயத்து வசனம் ''தாலிகல் கிதாப்!' (அந்த புத்தகம்) என்று ஆரம்பிக்கிறது. கையில் உள்ள ஏட்டைக் குறிப்பிடுவதாயின் 'ஹாதல்-கிதாப்' என்று இருந்திருக்கும். அரபியில் ''தாலிக'' என்றால் ''அந்த'' 'ஹாதா' என்றால் 'இந்த'.

தாலிகல்-கிதாபு-லா-ரைப-பீஹி-ஹுதன்-
வில்முத்தகீன்

இந்த ஆயத்தின் கருத்துரையாவது: ''அந்தக் கிதாபு (புத்தகம்) அதில் யாதொரு சந்தேகமும் இல்லை; அது முத்தகீன் ஆகியவர்களுக்கு வழிகாட்டுவதாக இருக்கிறது'' 'முத்தகீன்' என்று வர்ணிக்கப்பட்டிருப்பவர்களின் பிறப்புரிமை எத்தகைய விசேஷமானது என்பதைக் கவனியுங்கள். இந்தக் கிதாபு கொண்டு, அந்தக் கிதாபில் உள்ளவற்றை அறிந்து ஆவன செய்யக்கூடியவர்கள் அவர்

கள்; குர்ஆன் எனும் புத்தக வழியாக, லௌஹுல் மஹ்பூல் எனும் புத்தகத்தையும். விதிவசத்தையும் ஆண்டவன் (துஆவுக்கு) பிரார்த்தனைக்கு இரங்கி மாற்று உத்தரவுகள் செய்தால் அவற்றையும் வாசிக்கக் கூடியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். 'முத்தகீன்' என்பது தவிர்ந்து இருத்தல் எனும் கருத்துத் தரும் மூலத்திலிருந்து பிறந்த பதம். 'தீமையை விட்டுத் தவிர்ந்திருப்பவர்கள்' என்று தப்ஸீர் ஆசிரியர்கள் சிலர் அர்த்தம் செய்திருக்கிறார்கள். 'முத்தகீன்' என்றால் 'அல்லாஹ்வுக்கு அஞ்சுபவர்கள்' என்று அர்த்தம் செய்பவர்களும் உண்டு. அதே மூலத்திலிருந்து பிறந்த பதம் தான் 'தக்வா' என்னும் பெயர்ச் சொல். இந்தத் தப்ஸீர்காரர்கள் எழுதியிருப்பதும் சரிதான். ஆயினும், 'முத்தகீன்' என்பதற்கு அல்லாஹ் அல்லாத சகல பொருட்களின் பாசங்களையும் பற்றுக்களையும் விட்டுத் தவிர்ந்திருப்பவர்கள்; அல்லாஹ்வுக்கு மட்டும் சொந்தமாகி விட்டதால் மற்ற யாருக்கும் சொந்தமாகாது இருப்பவர்கள் என்று தரீக்காவின் ஞானமுள்ளவர்கள் கூறுவார்கள். அல்லாஹ் தவிர சகலவற்றின் பாசங்களையும் துறந்தவர்களென்றதும், சந்நியாசிகளென்றோ துறவிகளென்றோ நினைத்துவிடாதீர்கள்! ஆண்டவன் உண்டாக்கிய அறத்தை அவர்கள் விடுபவர்கள் அன்று. உலகில் இருப்பார்கள்; மனிதரென்ற முறையில் உள்ள சகல அறங்களையும் ஒழுக்கங்களையும் கடைப்பிடித்து வருவார்கள்: விதிக்கப்பட்ட ஷரீஅத் எனும் சட்டத்திலிருந்து ஒரு மயிரிழை கூடப் பிறழமாட்டார்கள்; எனினும், இவைகளில் எல்லாம், அல்லாஹ்வின் அனுமதிப்படி, குர்ஆனில் உள்ள உத்தரவுகளை முன்னிட்டு, அந்த உத்தரவுகளை மீறாமல், ஈடுபடுவார்கள்; அவர்களுடைய ஆத்மாவிலேயே அல்லாஹ் மீது மட்டும் பாசமும் பற்றும் நிறைந்திருக்கும்.



அல்லதீன-யூமினூன-பில்-கைபி-வ-யுகீமூனஸ்-

ஸலாத்த-வ-மிம்மா-ரஜக்னா ஹும்-யுன்-பி கூன்

அடுத்த ஆயத்தில், ஸூரா பகராவின் மூன்றாவது ஆயத்தில், முத்தகீன் என்பவர்களின் ''தக்வா'' எனும் குணம் உள்ளவர்களின் மூன்று லட்சணங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளாவன: (1) யூமினூன-பில்-கைபி. மறைந்திருப்பவற்றில் (நபியின் சாட்சியத்தை நம்புவதனால்) அவை உண்டென்று உறுதியான நம்பிக்கையுள்ளவர்கள், (2) வயுகீமூனஸ்-ஸலாத்த தொழுகையை நிலை நிறுத்தி வருபவர்கள். (3) ''வ-மிம்மா-ரஜக்னா ஹும். யுன்-பிகூன்.'' இறைவன் அவர்களுக்கு கொடுத்தவற்றை இறுகப் பிடித்துக் கொண்டிராமல் அவற்றிலிருந்து மற்றவர்களுக்கும் பங்கு கொடுப்பவர்கள். சிறிது யோசிப்பின், ''ஸூரா நூரில்'' கூறப்பட்ட மூன்று நிபந்தனைகளென யான் முன்னே எழுதிக் காட்டியுள்ள அதே மூன்று விஷயங்களையே இந்த வசனத்தில் வேறு பதப்பிரயோகங்களுடன் இறைவன் எடுத்துக் காட்டியிருக்கிறான் என்பதை உணர்வீர்கள்.

நம்பக்கூடிய ஒருவர், ''மதீனா'' இருக்கிறதென்று சொன்னதை நம்பி, மதீனா இருக்கிறதென்ற நபிக்கையுடன், அது தாம் காணாத நகராக இருப்பினும், அதற்குரிய வழிப்பயண ஏற்பாடுகளுடன் புறப்படுவாரல்லவா? அங்ஙனமே, ஆன்ம லோகம் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) கூறியதை நம்புவதால், ஆன்ம லோகத்தைத் தாம் காணாது இருப்பினும், அது உண்டு என்ற நம்பிக்கையுடன், யாத்திரை செய்பவர்களாக ''முத்தகீன்'' என்பவர்கள் இருக்கிறார்கள்.

இந்தப் பூத உடல் மட்டும் இருப்பதாக மற்றவர்கள் நினைத்துக் கொண்டிருக்கட்டும். மண்ணில் புதைபட்டு மண்ணாகவிருக்கும் இந்த உடல் மட்டும் சதம் என்று

நினைப்பவர்கள் அங்ஙனமே நினைத்துக் கொண்டிருக் கட்டும். இந்த உடலுக்குள் மறைந்துள்ள, ஆத்மீகப் பொருளால் சமைக்கப்பட்டுள்ள வேறு உடலும் உண்டு. இறக்கும்போது. சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டு, அச்சமயத்தில் நல்லோர்களாயின் கண்ணுக்குத் தெரியாத அமரர்கள் கொண்டு வரவிருக்கும் ஜோதிமயமான போர் வையைச் சூட்டிக் கொண்டு வெளியேற விருக்கும் ஆத்ம உடலும் உண்டு. பிரேதத்துக்குச் சூட்டப்படும் வெள்ளைக் கபன், நல்லோர்களாயின் அவர்களுடைய ஆத்ம உட லுக்கு, மலக்குல் மவுத்துக்கூட வரும் அமரர்கள் அணிவிக் கும் ஜோதி மயமான வெள்ளை உடைக்கு ஓர் அடையாள மாக இருப்பதுதான். இது பற்றிய விளக்கம் உள்ள நீண்ட ஹதீஸூம் உண்டு; இன்ஷா அல்லாஹ் பின்னால் எழுத விருக்கும் நூல்களில் இந்த ஹதீஸையும் இது பற்றிய இதர ஹதீஸ்களையும் எழுதிக் காட்டுவோம்.

இந்தப் பூத உடலில் புலன்கள் இருப்பதுபோல் மறைந்துள்ள ஆத்மீக உடலிலும் புலன்கள் இருக்கின் றன. ஷரீஅத்தை மீறாமல், தரீக்கத்தில் நடந்தால், (இப் புலன்கள்) இம்மையிலேயே திறக்க வேண்டியவையாகும். இது பற்றியே.

''மன்-கான-பீ-ஹாதிஹி-அஃமா-ப-ஹு-வ-பில்-
ஆகிரத்திஅஃமா''

(எவர்கள் இங்கு குருடர்களாக இருக்கிறார்களோ' இங்கே எவர்களின் அகக் கண்கள் திறக்கவில்லையோ, அவர்கள் ஆகிரத்திலும்—மறுமையிலும் - குருடர்களாகவே இருப்பார்கள்) என்கிறது குர்ஆன் ஆயத்து.

அகக் கண்ணும், அகச் செவியும் இதர அகப் புலன் களும் இருப்பது உங்களுக்கு மறை பொருளான விஷய மாக இருக்கலாம்; எனினும், அவை உண்டு என்ற ''ஈமான்-பில்-கைப்'' உள்ளவர்களாக நீங்கள் ஷரீ



அத்தைக் காப்பாற்றி வந்திருந்தால், ஷரீஅத்துடன் தரீக்கத்தையும் அறிய முற்படுங்கள். ஷரீஅத்தை விட்டி ருந்திருப்பின் தகாத காரியம் செய்திருந்தீர்கள் என்பதை உணர்ந்து பாவ மன்னிப்புத் தேடி ஷரீஅத்தைப் பேணி அத்துடன் தரீக்கத்தையும் அறிய ஆரம்பியுங்கள்.

பூத உடல் மட்டும் இல்லை; சூட்சும உடலும் உண்டு என்ற மறை பொருளை அறிந்தது போல், இந்தப் பூத உலகும் பிரபஞ்சமும் மட்டும் இல்லை; உடலிலிருந்து ஆத்மா பிரிவது போல், அதற்குரிய நேரம்வரும் பொழுது இச்சடதத்துவப் பிரபஞ்சத்திலேயே மறைந்துள்ள ஆத்மீகப் பிரபஞ்சமும் பிரிவதற்கு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். அந்த நேரம் வரும்பொழுது சடதத்துவ உலகு அழிந்துவிடும்; ஆத்மீக உலகில் ஆத்மீக உடல்களுடன் ஜீவியம் தொடர்ந்து நடைபெறுவதற்கு இருக்கிறது. நன்மை கசப்பானதாகவும் தீமை இனிப்பான தாகவும் இவ்வுலக வாழ்வில் தோன்றலாம்; சடதத்துவ உடல் என்ற திரை கிழிக்கப்பட்டு எறியப்படும் பொழுது- மரணம் வரும் பொழுது, குர்ஆன் ஹதீஸ் சொன்னது தான் சரி, நன்மைதான் இனிப்பு, தீமைதான் கசப்பு என்பதை எல்லா ஆத்மாக்களும் உணர்ந்து கொள்ளும்.

சடதத்துவ உடலும் உண்டு; சூட்சும உடலும் உண்டு சடதத்துவ உலகும். சூட்சும உலகும் உண்டு. அங்ஙனமே, நமது சடதத்துவக் கண்களுக்குத் தெரியும் ஜோதியும் உண்டு; சூட்சும ஜோதியும் உண்டு. இதுவும் நீங்கள் உணர வேண்டிய ஒரு மறை பொருள் ஆகும். உடலுக்குச் சடதத்துவ சூரியனுடைய சுடரும், சந்திரனுடைய சுடரும் அவசியமாக இருப்பதுபோல், சூட்சும உடலுக்கு அவசிய மான சூட்சும ஜோதிச் சுடரும் உண்டு. அந்தச் சுடர் உங் களுக்கு இன்று ''கைப்'' ஆக—மறைபொருள் ஆக இருக் கலாம். எனினும், ''ஈமான்-பில்-கைப்'' எனும் நம்பிக்கை

யுடன், நபி வழியில் நடந்தால் அகக் கண்களும் திறக்கும்; சூட்சும ஜோதிச் சுடரை உங்கள் அகக் கண்கள் காணும் நிலையும் வரும்.

இந்த அத்தியாயத்தில் ''ஈமான்-பில்-கைப்'' என்பதற்கு நீங்கள் ஆரம்ப நிலையில் அறிய வேண்டிய அர்த்தங்களைக் கொடுத்துள்ளோம்.

''ஈமான்-பில்-கைப்'' ஸ்திரமாக இருக்க, ''ஸலாத்' எனும் தொழுகையும் நிலைபெற்று, ஜக்காத்தும் சீர்பெற்றால், தரீக்காவில் ஆன்ம அபிவிருத்திக்குரிய வழியில் நடப்பவர்களாக ஆவீர்கள். இதுவே ஸூரா ''பக்கரா''வின் ஐந்தாவது ஆயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது,

உலாயிக-அலா-ஹுதன்-மிர்ரப்பிஹிம்-வ-உலாயிக-

ஹுமுல்-முப்லிஹூன்

'இவர்களே தங்கள் இறைவன் புறத்திலிருந்து அருளப்பட்ட வழியில் உள்ளவர்கள்; இவர்களே முப்லிஹூன் (பலாஹ் அடையப் போகிறவர்கள்) ஆவார்கள்'. 'பலாஹ்' என்றால் என்ன? வித்திலிருந்து விருட்சம்; வெளியாவதற்குத் தான் அரபியில் 'பலாஹ்' என்பது. ஒரு விவசாயியின் வெற்றி அவனது விளைவு சரியாக இருப்பதைப் பொறுத்த விஷயம். ஆகையால், நல்ல விளைவு எனும் கருத்துள்ள 'பலாஹ்' என்ற பதத்தை வெற்றிக்கும் அக்காலத்திய அரபிகள் உபயோகித்து, அகராதிகளில் 'பலாஹ்' என்பதற்கு 'வெற்றி' என்ற அர்த்தமும் எழுதப் பட்டிருக்கிறது. ஆகையால், 'முப்லிஹூன்' எனும் பதத்திற்குச் 'சித்தி அடைபவர்கள்' என்று அர்த்தம் எழுதும் மொழி பெயர்ப்பாளரும் உண்டு.

குர்ஆனில் உள்ள போதனைகளின் பீடிகையாகவுள்ள, ஸூரா 'பகரா'வின் முதல் ஐந்து ஆயத்துக்களின் இறுதி



யில் எந்த 'பலாஹ்' என்ற லட்சியம் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அந்த 'பலாஹ்' என்ற லட்சியத்தை முஸ்லிம்கள் சதாதம் முன்னிறுத்தியவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்துடனேயே தினசரி ஐந்து வேளையும் தொழுகைக்கு அழைப்பதற்காக 'பாங்கு' சொல்லப்படும் பொழுது 'ஹய்ய-அலல்-பலாஹ்' என்ற ஞாபகமூட்டுதலையும் செய்து வருமாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தொட்டிலிலிருந்து கபுறுக்குச் செல்லும்வரை கல்வியை வளர்க்குமாறு உத்தரவிட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த நிமிட முதல் 'பலாஹ்' அடைவதற்குரிய முயற்சி ஆரம்பிக்க வேண்டுமென்றும் விரும்பினார்கள். இதனாலேயே பிறந்த நிமிடத்திலேயே பிள்ளையின் செவியில் பாங்கு சொல்லுமாறு கட்டளையிட்டார்கள். முஸ்லிம்களாகிய உங்கள் செவிகளில் நீங்கள் பிறந்த நிமிடத்திலேயே 'ஹய்ய-அலல்-பலாஹ்' என்ற அழைப்பு விழுந்தது; எனினும், இஸ்லாமிய ஞானம் மங்கியிருக்கும் காரணத்தினால், ஒரு முஸ்லிமுக்குக் கிடைக்க வேண்டிய வளர்ப்பும், கல்வியும் கிடைத்தனவா என்பதுதான் சந்தேகம். சென்று போனது பற்றி வருந்திப் பயனில்லை. இன்றிலிருந்தேனும் 'பலாஹ்' என்ற லட்சியத்தை முன்னிறுத்தியவர்களாக, நமது வாழ்க்கையை நபி (ஸல்) காட்டிய முறைகளைக் கையாண்டு, திருத்தி அமைக்க முயற்சிப்போமாக!

## 3. இறைவனின் முதல் உத்தரவுகள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு குர்ஆன் வசனங்கள் வெளியான அதே தொகுப்பு ரீதியில் நம்மிடம் உள்ள குர்ஆனின் தொகுப்பு இல்லை. அதே வசனங்கள்தான்; எனினும், ஆண்டவனின் உத்தரவுப்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதே வசனங்களை மறுகோவையாகச்

செய்து, ஸூராக்களாகப் பிரித்து, நமக்குக் கொடுத்துச் சென்றார்கள். உதாரணமாக, நமக்கென நபிகள் நாயகம் (ஸல்) கோவை செய்து கொடுத்துள்ள குர்ஆன் தொகுப்பில் ''ஸூரா பாத்திஹா'' முதலாவதாக இருக்கிறது. அதன் பின் ''ஸூரா பகரா'', அதற்குப் பிறகு ''ஸூரா ஆல-இம்ரான்''. ஆனால், குர்ஆன் வசனங்கள் வெளியானது. முதலில் ஸூரா ''அலக்''கில் உள்ள, ''இக்ரா'' என்ற சொல்லுடன் ஆரம்பிக்கும் ஐந்து ஆயத்துக்கள். இரண்டாவதாக ஆண்டவனிடமிருந்து வந்த வசனங்கள் ''அல்-கலம்'' எனும் ஸூராவின் முதல் ஆயத்துக்கள், மூன்றாவதாக வந்த உத்தரவுகள் ஸூரா ''அல்-முஜ்ஜம்மில்'' ஆரம்ப ஆயத்துக்கள்.

அதே தெய்வ மொழிகளை நபிகள் நாயகம் (ஸல்) கோவை செய்து நமக்குக் கொடுத்துள்ள முறை நம்முடைய விஷய விளக்கத்துக்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது. எனினும், எந்த முறைக் கிரமத்துடன் இதே வசனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக 23 ஆண்டுகளில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்டு அவற்றின் சரித்திரமும் ஹதீஸில் அழியாது காப்பாற்றப்பட்டிருக்கிறதோ அந்த முறைக் கிரமம், குர்ஆனின் ஆழ்ந்த கருத்துக்களை அறிவதற்கு இன்றியமையாத திறவுகோலாக இருக்கிறது.

நபிகள் நாயகத்துக்கு முதலாவதாக ஆண்டவன் கொடுத்த உத்தரவுகளை இந்த அத்தியாயத்தில் சிறிது விளக்கிக் காட்டுவோம்.

'ஹிரா'வெனும் குகையில் நபிகள் நாயகம் ஏகாந்த நிலையில், தியானத்தில் மூழ்கியவர்களாக இருக்கையில், 'இக்ரா' (தொனிப்பீராக!)என்ற முதல் உத்தரவு வந்தது. எதைத் தொனிப்பது என்று புரியாது மலைத்து கொண்



டிருக்கையில், மறுபடியும் 'இக்ரா!' என்ற உத்தரவு ஒலித்தது. நபிகள் நாயகம் இன்னும் மலைத்துக் கொண்டிருந்தபோது,

'இக்ரா-பிஸ்மி-ரப்பிகல்லதீ-கலக்' (படைத்த உமது இறைவனின் அனுமதி கொண்டு, அவனுடைய நாமத்துடன் தொனிப்பீராக).

என்ற முதல் ஆயத்து வெளியாயிற்று. தொனிப்பதற்கு அனுமதி, படைத்த இறைவனின் அனுமதி, அவனுடைய அனுமதிக்கு அறிகுறியாக அவனுடைய நாமத்துடன் தொனிக்கும் உத்தரவு. அந்தத் தொனிப்பினால் அடைய வேண்டியதென்ன? மறு ஆயத்து தொனிப்பின் நோக்கத்தை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

''கலக்கல் இன்ஸான-மின் அலக்''

'அவன் மானிடனை இரத்தத் துளியிலிருந்து படைத்தான்.' படைப்பின் தன்மை என்ன? கர்ப்பத்தில் துளி இரத்தமாக இருந்து ஆண்டவன் உண்டாக்கியுள்ள இயற்கையின் சட்டப்படி எல்லா அவயவங்களும் சீர் பெறப் பெற்ற ஒருமனித உருவாக ஆகின்றதல்லவா? அவ்வாறு இரத்தத் துளியாக இருந்த கருவை அதன் கர்ப்பத்தில் ஓர் உருவடையச் செய்யுமாறு எந்தச் சிருஷ்டிக் கர்த்தன் செய்தானோ அவனுடைய அனுமதி கொண்டு தொனிக்க ஆரம்பியுங்கள்! அதுகொண்டு சடதத்துவ விஷயத்தில் கரு உருவானது போல், ஆத்மீக விஷயத்தில் அற்புதமான வளர்ச்சிகள் ஏற்படுவதை ஆண்டவன் நாடியிருக்கிறான். இந்தக் கருத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உணர்ந்ததும், மூன்றாவது ஆயத்து வெளியாயிற்று. இங்கு இம்மட்டுடன் ஸூரா ''அல்அலக்'' ஆரம்ப ஆயத்துக்களின் வியாக்கியானத்தை நிறுத்துகின்றோம்.

அடுத்தபடியாக,

''நூன்-வல்-கலமி-வ-மா-யஸ்த்துருன்''

என்று ஆரம்பிக்கும்-ஸூரா அல்-கலமில் உள்ள ஆரம்ப ஆயத்துக்கள் வெளியாயின. மூன்றாவதாக ஸூரா அல்-முஜ்ஜம்மிலின் நான்காவது ஆயத்தில்;

''வ-ரத்திலில்-குர்ஆன-தர்த்தீலா''
என்ற உத்தரவு வந்தது.

இதற்குத் தப்ஸீர் ஆசிரியர்கள் சிலர் ''குர்ஆனை அதற்குரிய ஒழுங்குடன் ஓதுங்கள்'' என்ற அர்த்தம் செய்திருக்கிறார்கள். இந்தத் தப்ஸீர்களை வாசிப்பவர்கள் ''குர்ஆனை'' என்றதும் முழுக் குர்ஆனையும் என நினைத்துக் கொள்வார்கள். ''ஒழுங்குடன்'' என்றதும் ''கிராஅத்'' சட்ட ஒழுங்கு என்று நினைத்துக் கொள்வார்கள். இந்தத் தப்ஸீர் ஆசிரியர்கள் செய்துள்ள அர்த்தமும் மொழி அகராதிப்படி ஒரு வழியில் சரியானதுதான். எனினும், ''வரத்திலில்-குர்ஆன-தர்த்தீலா எனும் இவ்வுத்தரவு வந்த சமயத்தில் முழுக் குர்ஆனும் இருந்ததா? 'அல்-அலக்கின்' ஆரம்ப ஐந்து ஆயத்துக்கள், ஸூரா அல்-கலமின் ஆரம்ப ஆயத்துக்கள். இவை மட்டும் தாமே நபிகள் நாயகத்திடம் அச்சமயத்தில் இருந்தன. அதற்கு அடுத்தபடியாக வெளியான ஆயத்துக்களில் ஒன்றின் பிற்பகுதிதான், ''வரத்திலில்-குர்ஆன தர்த்தீலா'' என்பது. எனவே, அச்சமயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) இந்த ஆயத்துக்கு என்ன அர்த்தம் செய்தார்கள் என்பதையல்லவா உணர வேண்டும்!

''கர அ'' (தொனித்தல்) எனும் மூலத்திலிருந்து பிறந்த ஏவல் ''இக்ரா'' என்பது தொனிக்கப்படும் பொருளுக்கு 'குர்ஆன்' என்று பெயர். ஆண்டவன் தொனிக்கும்படி உத்தரவு கொடுத்தான். ''இக்ரா'' என்ற சொல்லில், உத்தரவுப்படி நபிகள் நாயகம் (ஸல்) தொனிக்க ஆரம்பித்தவற்றைச் சரியான அளவுடனும் நிறையுடனும் தொனிக்க வேண்டுமென்பது மறுஉத்தரவு. ''ரத்தில்'' என்றால் ''எடை போடு'' என்பது அர்த்தம்; நாளடைவில் ஒழுங்கு என்ற அர்த்தமும் இப்பதத்துக்கு உண்டாகிவிட்டது. அல்லாஹ்வின் நாமத்தால் அனுமதியால் என்னென்ன உச்சரிக்க வேண்டுமென்று முதலாவது 'வஹியில்'—வெளிப்பாட்டில் சொல்லிக் கொடுக்கப்பட்டது; இரண்டாவது வெளிப்பாட்டில் அதன் சில விவரம் கொடுக்கப்பட்டது; அதை அதற்குரிய நிறையுடன் உச்சரிக்க வேண்டும் என்றுதான் மூன்றாவது வெளிப்பாடு ஆகிய 'அல்-முஜ்ஜம்மில் ஸூராவில் சொல்லப்பட்டது.



இன்று உள்ள அரபி அகராதிகளும் இலக்கணங்களும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் கிடையா. இலக்கணம் உண்டாகாதிருந்த, இயற்கை மயமான இலக்கியமாகவிருந்த ஒரு மொழியில் அல்லாஹ் தனது திருத்தூதருடன் சம்பாஷித்தான். குர்ஆனின் ஒவ்வொரு பதத்துக்கும் அன்று என்ன கருத்து கொள்ளப்பட்டதென்பதை உணர்ந்து அதை விளக்குவதுதான் தப்ஸீர் ஆசிரியர்களின் கடமை.

அன்றைய அரபி மொழியில் 'ரத்தில்' என்பது நிறை போடுவதற்கு—சீராக ஒரு காரியம் செய்வதற்கு உபயோகமான பதம், இயற்கை வாழ்வு நடாத்திவந்த மக்கத்து அரபிகள் சிலந்திப் பூச்சியை ''ருத்தைல்'' என்று அழைத்தார்கள்; 'ருத்தைல்' என்பதும், 'ரதல' எனும் அதே மூலத்திலிருந்து பிறந்த பதமே. 'ருத்தைல்' என்ற சிலந்திப்பூச்சியில் சிருஷ்டிக்கர்த்தன் வைத்துள்ள அற்புத சக்தியைக் கவனியுங்கள்! அப்பூச்சி தனது எச்சில் கொண்டு எத்தகைய சீருடனும் ஒழுங்குடனும் வீடுகட்டி முடிக்கிறதென்று பாருங்கள்! கேவலம், சிலந்திப்பூச்சியை சிருஷ்டித்த இறைவன், அந்தச் சிலந்திப் பூச்சிக்கு ஒரு சக்தியைக் கொடுத்தான்; அனுமதியும் கொடுத்தான். அந்தப் பூச்சி தன் நாவில் எச்சிலால் அந்தரத்தில் தான் இருப்பதற்குரிய வீட்டைக் கட்டி முடித்து விடுகிறது. சிருஷ்டிகளில் அதி சிரேஷ்டமானது மானிட சிருஷ்டி. மானிடனுடைய நாவிலும், அவ

னுடைய தொனியிலும் என்ன சக்தியை வைத்திருக்கிறான் என்பது சிருஷ்டித்த இறைவனுக்கல்லவா தெரியும்! அந்த நாவினால் தனது அனுமதியுடன், சில விஷயங்களை உச்சரிக்குமாறு, தொனிக்குமாறு, உச்சாடனம் செய்யுமாறு உத்தரவிட்டான்; உச்சரிப்பில் ஒரு 'ரதல்' (நிறை, சீர்) இருக்க வேண்டுமென்று கூறினான்.

குளவியைக் கூர்ந்து கவனியுங்கள். அதுவும் அல்லாஹ்வின் படைப்புகளுள் ஒன்று. குளவி என்ன செய்கிறது? மண்ணை எடுத்துக்கொண்டு வந்து ஒரு சுவரில் விடு கட்டுகிறது. அந்த மண் வீட்டில் சில சிறிய அறைகளை அமைக்கிறது. பிறகு சில பச்சைப் புழுக்களைத் தேடிக் கொண்டு வருகிறது. அந்தப் பச்சைப் புழுக்கள் எங்கு கிடைக்குமென்பது அந்தக் குளவிக்குத் தெரியும். புழுவைக் கொண்டு வந்ததும் மண் விட்டு அறைக்குள் திணித்து, 'உம்' என்ற ஒரு தொனியுடன், அந்தப் புழுவைக் கொட்டி உணர்வற்றதாக்கி விடுகிறது. அந்தக் குளவியின் தொனி புழுவின் செவியில் தொனித்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே, உஷார் மாறி விடுகிறது. குளவி உடனே மறு மண் கொண்டு வந்து அதன் வாயிலை அடைத்து விடுகிறது. இங்ஙனம் அறைக்கு ஒரு புழுவாக வைத்து அடைத்து முடித்தபின், குளவி என்ன செய்கிறது? தினசரி காலை ஒரு தடவை மாலை ஒரு தடவை வந்து மண் வீட்டை 'உம்' என்ற ஒருவித இரைச்சலுடன் சில தடவை வட்டமிட்டு விட்டுச் செல்கிறது. நாற்பதாம் நாள் மண் வீட்டின் அறைகளுடைய வாசல்களைப் பெயர்க்கிறது. அச்சமயத்தில், சிறகு அற்ற பறக்க முடியாத பூச்சியாக இருந்த புழு, சிறகுள்ள பறக்கக் கூடிய குளவியாக வெளியில் வருகிறது. குளவியின் 'உம்' என்ற இரைச்சலுக்கு, நாற்பது நாட்களில் சிறகற்ற பறக்க முடியாத புழுவைச் சிறகுள்ள—பறக்கக் கூடிய புழுவாக மாற்றும் சக்தியை இறைவன் வைத்திருக்க, மானிடனுடைய 'திக்று' எனும் உச்சாடனத்துக்கு எத்துணை சக்தி இருக்க



வேண்டும் என்பதை யோசித்துப் பாருங்கள்! ''ஸூரா அல்-முஜ்ஜம்மில்' எட்டாவது ஆயத்தில் உள்ள உத்தரவு திக்றுடைய உத்தரவு தான்.

வத்குரிஸ்ம ரப்பிக-வதபத்தல் இலைஹி-தப்தீலா.

'திக்று'டைய உத்தரவு தான் நபிகள் நாயகத்துக்கு முதலில் வந்தது; அதன் பின்னரே தொழுகையின் உத்தரவு வந்தது. இஸ்லாத்தின் முதல் விதியாக திக்றைத் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதித்துள்ளார்கள். இஸ்லாத்தின் முதலாவது 'பர்லு' (விதி) கலிமா என்று அவர்கள் கூறியது 'திக்று' என்பதைத்தான். அன்று மக்காவிலும் மதீனாவிலும் முஸ்லிம்களானவர்கள் உண்மையை உணர்ந்தார்கள்; 'திக்று' என்ற ஞாபகம் உள்ளவர்களானார்கள்; 'திக்று'க்குரிய கலிமாக்களை உச்சரிப்பவர்களானார்கள்; 'திக்று'க்குரிய 'கலிமா' என்றால் அரபியில் 'சொல்' என்பதாகும். மனத்தை இங்ஙனம் சீர்படுத்திக் கொண்டு ஐந்து நேரத் தொழுகையைப் பேண ஆரம்பித்தார்கள்; இஸ்லாத்தின் இதர உத்தரவுகளை நிறைவேற்றினார்கள்; ஆண்டவனுடைய உத்தரவுகளையும் நாட்டங்களையும் அறிவதற்காகக் குர்ஆனைத் தினசரி ஓதி தியானிப்பவர்களாக இருந்தார்கள்.

''இன்ன-அப்லலத்-திக்ரி-லாயிலாஹ-
இல்லல்லாஹு''

(நிச்சயமாக திக்றுகளில் ஏற்றமானது லாயிலாஹ இல்லல்லாஹு) என்பது நபி வாக்கியம். இஸ்லாத்தின் முதற் கடமை 'திக்று' என்று அக்காலத்தில் சொல்லப்பட்டது. பிறகு திக்றுகளில் சிரேஷ்டமானது 'லாயிலாஹ-இல்லல்லாஹு' என்ற நபி வாக்கியத்தை முன்னிட்டு, இஸ்லாத்தின் முதற்கடமை 'லாயிலாஹ இல்லல்லாஹு' என்று சொல்லுவது என்று போதிக்கப்பட்டது. நாளடைவில் இஸ்லாத்தின் முதல் பர்லு என்பது ஒரு தடவை

நாவால் 'லாயிலாஹ-இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி' என்று சொல்லி விட்டால் முடிந்து விட்டதென்று நினைக்க ஆரம்பித்து விட்டனர்.

ஒரு வீட்டுக்கு அஸ்திவாரம் போடுவது என்றால் நாவால் 'அஸ்திவாரம்' என்று கூறிவிட்டால் முடியுமா? பூமியைத் தோண்டி அஸ்திவாரம் போட வேண்டாமா? இஸ்லாத்துக்கு அஸ்திவாரம் போட வேண்டாமா? இஸ்லாத்துக்கு அஸ்திவாரம் முதல் பர்லு ஆகிய திக்ரு; அதைத்தான் 'கலிமா தய்யிபா' என்றும் அழைக்கப்பட்டது, அது எத்தகைய அஸ்திவாரம் என்று அறியாமல் அறிந்து அஸ்திவாரத்தைப் போடாமல், நாவினால் கலிமா சொன்னதுடன் விஷயம் முடிந்து விட்டதென்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த போதும், 'திக்றுல்லாஹி' என்று 'ஸூரா நூரிலும்', கலிமா வென்று ஹதீஸிலும் கூறப்பட்ட இஸ்லாத்தின் அஸ்திவாரப் போதனையை நன்கு அறிய முயற்சிப்போமாக!

## 4. வித்திலிருந்து விருட்சம்

மனிதப் படைப்பில் இறைவன் மறைத்து வைத்துள்ள விருத்தியாம்சங்கள் பல. இவை விருத்தியடையாதிருக்கும் நிலைமையில், மானிடனுக்கும் மிருகங்களுக்கும் எந்த வித்தியாசமும் இருப்பதில்லை. வித்தில் விருட்சம் மறைந்திருப்பதுபோல் இவ்விருத்தியாம்சங்கள் மானுட இயற்கையில் மறைந்து கிடக்கின்றன. இவைகளை ஆண்டவன் வீணாகச் சிருஷ்டிக்கவில்லை. இவற்றின் விருத்திக்குரிய வழிகளையே நபிகளை அனுப்பிப் புகட்டி அருளியுள்ளான். இந்த விருத்தியே ''பலாஹ்'' எனப்படுவது.

இதுவே தன்னை அறிந்தவன் தனது இறைவனை அறிவான் என்று நாயக வாக்கியம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வாறு நபி வாக்கியம் இருப்பதாக இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்களும் தங்களுடைய 'இஹ்யா' 'கீமியாயெ-ஸஆதத்' எனும் நூல்களில் எழுதியுள்ளார்கள்.

ஹதீஸ்களை அலசிப் பார்க்கையில், ஒவ்வொருவரும் தன்னில் என்னென்ன விருத்தியாம்சங்களை அல்லாஹ் வைத்துள்ளான் என்பதை அறிய முயன்றால், அது கொண்டு எதற்காகத் தன்னை அல்லாஹ் சிருஷ்டித்தருளியுள்ளான் என்பதை உணர்ந்து கொள்ள முடியுமென்ற கருத்தையே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதித்தருளியுள்ளார்கள் என்பது புலனாகும். அல்லாஹ் 'அக்பர்' ஆக இருக்கிறான்; அதாவது, நமது சக்திகளுக்கும் அறிவுக்கும் எட்டாதவனாக இருக்கிறான். அவனை அறிவதற்காக நாம் பிறக்கவில்லை; அவன் எதற்காக நம்மைச் சிருஷ்டித்திருக்கிறான் என்பதை அறிந்து, என்னென்ன உத்தரவுகளை அளித்திருக்கிறான் என்பதை அறிந்து, அவன் வாக்களித்துள்ள அருள்களையும் கொடைகளையும் கூலிகளையும் பெறுவதற்காகப் பிறந்திருக்கிறோமேயன்றி வேறன்று. அவன் உண்டு என்பதை அறியலாம்; அவன் ஏன் நம்மைச் சிருஷ்டித்தான் என்று அவன் தெரிவித்திருப்பதை தெரியலாம்; அவன் எதற்காக சிருஷ்

டித்தானோ அதற்குரிய முயற்சிகளைச் செய்யலாம்; அதற்கு என்னென்ன கைமாறுகளை அளிப்பதாக வாக்களித்துள்ளானோ அவைகளை அடையப்பெறலாம்; இதுவே மானிட ஜீவியத்தின் நோக்கம்.

சமுத்திரக் கரையில் உள்ள ஒருவன் ஒரு சிறிய குழியைத் தோண்டி அதில் சமுத்திரத்தின் நீர் முழுவதையும் நிறைத்துவிட நினைப்பதுபோல், மட்டுக்கடங்காத பொருளாகிய ஆண்டவனுடைய தன்மையைத் தமது சிற்றறிவால் முற்றும் அளந்துவிடுவது முடியாத காரியம். ஞானம் என்றும் மோனம் என்றும் என்னவோ பகற்கனவுகளையும் வீண் குதர்க்க சம்பிரதாயங்களையும் சிலர் துரத்திக் கொண்டு திரிகிறார்களே, அவை இஸ்லாத்துக்கு நேர் முரணானவை. முஸ்லிம்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) கூறியதென்ன? சர்வ சக்தனும் சர்வ கருணாகரனும் சர்வ ஞானியுமாகிய அல்லாஹ் நம்மைச் சில காரணங்களை முன்னிட்டுப் படைத்துள்ளான்; வீணுக்குப் படைக்கவில்லை. நமக்கு அவன் கொடுத்துள்ள காலமும் இடமும், காலத்துக்குக் கட்டுப்பட்டு, இடம் என்ற வரையறையில் உள்ள சாதனங்களும் சில நோக்கங்களை முன்னிட்டு அருளப்பட்டவை, அவற்றை நற்பிரயோகம் செய்வதற்குரிய வழியை அல்லாஹ்வே காட்டியருளியிருப்பதுதான் இஸ்லாம்.

முஸ்லிமின் பிரார்த்தனை என்ன?

ரப்பனா-மாகலக்த-ஹாதா-பாதிலன்-ஸுப்ஹானக-வகினா-அதாபன்னார்

சிருஷ்டித்துச் சம்ரட்சிக்கும் இறைவனே! இதை-என்னையும் எனது ஜீவியத்தையும்—வீணுக்கு நீ சிருஷ்டித்தாய் இல்லை. எந்த முயற்சிக்காகச் சிருஷ்டித்தாயோ அந்த முயற்சி செய்யக் கூடிய சக்தியும் சுடரும் உன்புறத்



திலிருந்து கிடைக்கட்டும். எதற்காகச் சிருஷ்டித்தாய் என்பதை உணராது வாழ் நாளை வீணாளாக்கி, வீணாக்கியவர்கள் அனுபவித்துத் தீருவார்கள் என்று நீ எச்சரித்துள்ள அக்கினியிலிருந்து எங்களை ரட்சித்து அருளுவாம்!'' இது மேற்கூறிய துஆவின் கருத்துரை.

எதற்காக அல்லாஹ் சிருஷ்டித்து அருளியுள்ளான்? அதற்கு அவனே அளித்துள்ள பதிலாவது:

வ மா கலக்துல் ஜின்ன-வல் இன்ஸ-இல்லா-லி யஃபுதூன்.

''ஜின்னுகளையும் மனிதர்களையும் என்னுடைய அப்துகள்—உத்தரவுப்படி தொண்டாற்றுபவர்கள்—ஆக இருப்பதற்கேயன்றி நான் சிருஷ்டிக்கவில்லை.''

''அப்து'' என்றால் எஜமானுக்கு முற்றிலும் சொந்தமான அடிமை. அப்து ஆக இருத்தலுக்கு 'இபாதத்' என்று பெயர். எனினும், 'இபாதத்' என்னும் பதத்தை இக்காலத்திய முஸ்லிம்கள் பெரும்பாலும் தப்பர்த்தம் செய்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் செய்து கொண்டிருக்கும் தப்பபிப்பிராயத்தை விளக்குவதற்கு ஓர் உபமானக் கதையை எழுதுகிறேன்.

பல பூமிகளின் மீது ஆட்சி நடத்தி வந்த ஒரு மன்னன் இருந்தான். அவனுடைய ஆதிக்கத்திலிருந்த ஒரு பூமியிலுள்ள சில அடிமைகளை மறு பூமிக்கு அனுப்பி வைத்தான். அதுவும் விசித்திரமான முறையில் அனுப்பி வைத்தான். அரசனிடமிருந்த யந்திர, மந்திர சக்திகளைக் கொண்டு, ஒரு பூமியில் இருந்து கொண்டிருந்த அடிமைகள் கண்ணைப் பொத்திவிட்டுத் திறப்பதற்குள் புதிதான ஒரு பூமியில் தாங்கள் இருப்பதைக் கண்டார்கள். அந்தப் பூமியின் காற்றில் மறதியை உண்டாக்கும் ஒரு சக்தி இருந்தது. தாங்கள் இன்ன அரசனின் அடிமை என்பதையும், தங்களுக்குத் தமது அசல் பூமியில் கொடுக்கப்பட்ட

படிப்புகளையும் மறந்து விட்டனர். இவ்வாறு இவர்கள் மறதிக்கு ஆளானதை அறிந்த அவன், மறுசக்தியை உபயோகித்து, அவர்களுக்கிடையில் தன்னுடைய பிரதிநிதியைத் தோன்றுமாறு செய்தான். அந்தப் பிரதிநிதி, 'நீங்கள் இன்ன அரசனின் அடிமைகள். உங்களை இங்கு அனுப்பப்பட்டிருப்பது இன்னின்ன காரியங்களை நீங்கள் செய்து அதன் மூலம் இன்னின்ன விஷயங்களை அடைந்துவிட்டுத் திரும்புவதற்காக' என்று எடுத்துக் காட்டினார். சிலர் மனத்தில் மறைந்திருந்த சாட்சியங்கள் ஞாபகத்துக்கு வந்து எஜமானனாகிய அரசன் எதற்காக அந்தப் புதிய பூமிக்கு அனுப்பி இருக்கிறான் என்பதை அறிந்து, அவன் உத்தரவுப்படி தங்களின் காலத்தைச் செலவழித்தனர். இந்தப் பூமி தான் சதம், நமக்கு எஜமானனாகிய அரசன் தான் நம் கண் முன் இல்லையே என்று, அனுப்பப்பட்ட வேலையைச் செய்யாமல் தற்காலிக ஜாகையில் மனம் போனபடி நடந்து கொண்டிருந்தனர் சிலர். ஒரு சிலர் தங்களின் நிலைமை என்ன, கடமை என்ன என்பதை உணர முயற்சிக்காமல் அரசன் உண்டா இல்லையா என்று விவாதிக்க ஆரம்பித்தனர். ஒரு சிலர், திரும்பிச் சென்ற பின் அரசனின் சந்நிதானத்தில் ஆஜராகையில் அறிவோம் என்பதுடன் திருப்தியடையாது, அங்கிருந்து கொண்டே, அரசனைத் தங்களின் யூகத்தால் அறிவதிலும் அளப்பதிலும் ஈடுபட்டனர். மற்றும் சிலர் அரசனின் பிரேமையிலிருப்பதாகக் கூறிக் கொண்டு எங்கள் அரசனைப் போல் உண்டா என்று புகழ்ந்து கொண்டிருந்தனர்.

ஆயினும், நீங்கள் ஒருவனை ஒரு வேலைக்காக நியமித்து அவனை கல்கத்தாவுக்கு அனுப்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் என்ன செய்ய வேண்டும் எப்படி நடந்து கொள்ள வேண்டும், என்னென்ன சாதித்து விட்டுத் திரும்ப வேண்டும் என்ற உத்தரவுகளைக் கடிதத்தில் அனுப்புகிறீர்கள் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். உங்களின் ஏஜண்டு, உங்கள் உத்தரவுகள் கொண்ட



கடிதத்துக்குத் தினம் சாம்பிராணி போட்டுக் கொண்டு, கையில் ஒரு ருத்திராட்ச மாலையை வைத்துக் கொண்டு என்னுடைய முதலாளியைப் போல் உண்டா என்று புகழ்ந்து கொண்டும் பாடிக் கொண்டிருந்து காலத்தை மண்ணாக்கினால் அவனை உண்மையான ''அப்து''—வேலைக்காரன் என்று சொல்லுவீர்களா? யோசித்துப் பாருங்கள். எவற்றைச் சாதிப்பதற்காக அனுப்பப்பட்டானோ அவற்றைச் சாதிக்காமல் திரும்பி வந்த வேலைக்காரன், ''இல்லை எஜமான், சதா உங்கள் புகழைத்தான் பாடிக் கொண்டிருந்தேன்'' என்று சொன்னால் அவனிடம் என்ன சொல்லுவீர்கள்?

உங்களை சிருஷ்டித்து; முதலில் ''மீதாக்குடைய நாளில்''—வாக்குறுதி வாங்கப்பட்ட நாளில்—தன் சந்நிதானத்தில் ஆஜராக்கிச் சில அமானிதங்களைக் கொடுத்தான். சில வாக்குறுதிகளை உங்களிடமிருந்து வாங்கினான்.

''அலஸ்து – பிரப்பிகும்''

''நான் உங்களைச் சிருஷ்டித்த இறைவனல்லவா?'' என்று அவன் கேட்டான்;

காலூ—பலா ஷஹித்னா

ஆத்மாக்கள், 'சந்தேகமின்றி அதுவே சத்தியம். நாங்கள் சாட்சி பகர்கிறோம்' என்று கூறின. இது குர்ஆனில் ''ஸூரா அல்-அஃராஃபில்'' அல்லாஹ் ஞாபக மூட்டியுள்ள சம்பாஷணை.

பிறகு, நீங்கள் இப்புவியில் பிறப்பதற்கென அவன் தனது தக்தீரின் சட்டப்படி நிர்ணயித்துள்ள நேரத்தில் நீங்கள் பிறக்குமாறு செய்தருளியுள்ளான். மறதியின் காற்று உள்ள இப்புவியில் நீங்கள் மறந்து விடுவீர்கள் என்பதை அறிந்து, நபிகளை அனுப்பி ஞாபக மூட்டினான்.

இறுதியாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தோற்று வித்துத் தனது மொழிகளாகிய குர்ஆனை உங்களுக்குக் கொடுத்து, அவற்றிற்கு வியாக்கியானமான ஜீவியத்தை—ஸுன்னத்தை—நடத்திக் காட்டுமாறு செய்துள்ளான்.

வித்திலிருந்து விருட்சத்தை வெளியாகச் செய்யும் இறைவனுக்கு விருட்சத்தை திரும்ப வித்துக்குள் செல்லுமாறு செய்ய முடியுமா, முடியாதா? ஆலமே, அர்வாஹில், ஆத்மீக உலகில், உங்களை ஒரு விருட்சமாக்கிய நாயன், மறுபடியும் விருட்சத்தை வித்தாக ஆக்கி, இப்புவியில் வித்து விருட்சமாக மறுபடியும் ஆக வேண்டுமென்று நாடியுள்ளான்.

உங்களுடைய ஆத்மாக்கள் வித்துக்கள் போன்றவை. அவைகளுள் விருட்சங்கள் மறைந்திருக்கின்றன. வித்துக்களை விருட்சங்களாக்கி இதர சிருஷ்டிகளுக்கு நீங்கள் கனிகளை கொடுக்க வேண்டுமென்பது ஆண்டவனின் நாட்டம். அதற்குரிய ''ஸிராத்துல்—முஸ்தகீம்'', நேரிய சுருக்க வழி உங்களுக்கு நபிகள் நாயகம் மூலம் புகட்டப் பட்டிருப்பதற்கே இஸ்லாம் என்று பெயர்.

நபிகள் நாயகம் (ஸல்) என்ன கூறினார்கள்? நீங்கள் எங்கு, எந்தச் சூழ்நிலையில், எந்த உலக சந்தர்ப்பங்களில் இருப்பினும், அவைகளில் இருந்து கொண்டே, உலகாபிவிருத்தியைக் காணுவதுடன், உங்களின் ஆத்ம வளர்ச்சியையும் உண்டாக்க வேண்டுமென்று கூறினார்கள். உலக வாழ்வில் நீங்கள் எங்ஙனம் நடந்து கொள்வது என்பது பற்றியும் வழிகளைக் காட்டினார்கள். உலகக் கஷ்ட நஷ்டங்களில் எங்ஙனம் ஈடேறுவது என்பதையும் போதித்தருளினார்கள். உலக வாழ்வு மனம் போனபோக்காக இருக்காமல், எஜமானனாகிய அல்லாஹ் தனது சிருஷ்டியாகிய மானிட ஜென்மத்துக்குக் கொடுத்துள்ள திட்டத்தின்படி எப்படி அமைவது எனும் மார்க்கங்களையும்



கற்றுக் கொடுத்தார்கள். அத்துடன், மறை பொருளாக உள்ள சூட்சும உடலின் வளர்ச்சி, மறை பொருளாக உள்ள சூட்சும ஜோதியைக் கிரகித்தல் ஆகியவற்றிற்கும் வழிகளை விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

அவர்கள் போதித்தவற்றுள் அதி முக்கியமானது, ''திக்றுல்லாஹ்'' (அல்லாஹ்வின் நாம தியானம்) என்பது.

''கலிமா'' என்றால் அரபியில் ''சொல்'' என்பதாகும். ''தய்யிபா,' என்றால் ''பரிசுத்தம்''. ''கலிமா தய்யிபா', என்றால் ''பரிசுத்தமான சொல்''. ''கலிமா தய்யிபா' பற்றித் திருகுர்ஆனில் ''ஸூரா இப்ராஹீமில்'' கூறப்பட்டுள்ள உபமானமாவது:

அலம்தரகைப-லரபல்லாஹுமதலன்-கலிமத்தன்-

தையிபத்தன்-கஸஜரத்தின் தையி பத்தின்

அஸ்லுஹா-தாபிதுன்-வபருஅஹா-பிஸ்ஸமாயி-

தூஃதி-உக்கலஹா-குல்லீ ஹீனிம்-பிஇத்னி

ரப்பிஹா வ-யல்லுரி புல்லா ஹுல்-அம்தல-லின்னாஸி

லஅல் லஹும்-யத-தக்கருன்

பரிசுத்தமான சொல், பரிசுத்தமான விருட்சத்துக்கு ஒப்பானது; அதன் வேர் நிலையானது, அதன் கொப்புகள் வானமளாவியவை. எல்லாக் காலங்களிலும் இறைவனின் அனுமதியால் கனி தரும் விருட்சம் அது!

மனிதர்களின் சொற்களும் உண்டு; ஆண்டவன் அனுமதிப்படி, உச்சரிக்கப்படும், அவன் தனது தூதர் மூலம் காட்டிக் கொடுத்த சொற்களும் உண்டு. ஓர் அரசனுடைய அனுமதியுடன் அந்த அரசனின் வைஸிராய் ஓர் உத்தரவு கொடுக்கிறான்; வைஸிராய் உத்தரவு அரசனுடைய உத்தரவாகவே இருக்கிறதல்லவா? அந்த அரசனுக்குக் கட்டுப்

பட்ட ராணுவங்கள் அனைத்தும் வைஸ்ராயின் உத்தரவுப் படி நடக்கின்றனவல்லவா? எனவே, ஆண்டவனுடைய அடிமையாக இருப்பதை உணர்ந்து, உத்தரவுப்படி நடக்கும்அடிமையாகி அரசனின் உத்தரவுப்படி நடக்கும் அடிமை எதையும் உச்சரிக்கும்பொழுது, அஃது அரசனின் உத்தரவுக்குச் சமமானதாக ஆகின்றது. இக்கருத்தையே முஹிய்யித்தீன் அப்துல் காதிரு ஜீலானி ஆண்டகை (ரஹ்) அவர்கள், ''உண்மையான அடிமையின் நாவிலிருந்து எழும் பிஸ்மில்லாஹி என்பது எஜமானனாகிய இறைவனின் 'குன்' என்ற உத்தரவுக்குச் சமமானது'' என்று கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் உத்தரவுப்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மை உச்சரிக்குமாறு உத்தரவிட்டுள்ளவற்றை அவற்றின் தத்துவார்த்தம் அறிந்து உச்சரிக்கின், அவைகள் வெறும் சொற்கள் அன்று, பெரும் மாறுதல்களை உண்டாக்கும் தெய்வ கடாட்சம் வாய்ந்தவை என்பது அனுபவத்தில் காணக்கூடிய விஷயம். சகல முயற்சிகளும் செய்கைகளும் நிய்யத்தை பொறுத்தவை என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறி இருப்பதை அனேகர் சரிவர உணரவில்லை. என்ன செய்யப் போகிறோம், எதற்காகச் செய்யப் போகிறோம் எதை அடைவதற்காகச் செய்யப் போகிறோம் என்பவனவற்றை நன்கு உணர்ந்து கொள்வதற்கு பெயர்தான் ''நிய்யத்து'' என்பது.

நிய்யத்துக்கு ஓர் உபமானம்: தேகப் பயிற்சி செய்பவன் தன் கரத்தின் தசையை இறுகுமாறு செய்ய விரும்புகிறான். அதற்குரிய வழி தினசரி ஒரே நேரத்தில் கையை 21 தடவை மடக்கி நீட்டுவதுதான். இங்ஙனம் 40 நாள் செய்ய வேண்டுமென்று தேகப் பயிற்சி ஞானம் உள்ள குரு கூறுகிறார். சீடன் இதை நன்கு உணர்ந்து, தினசரி சில நிமிடங்கள் தனது மனத்தை முற்றிலும் கையின் மீது செலுத்திக் கொண்டு மடக்கி நீட்டுகிறான். நாற்பதாம்



நாள் தசை இறுகிவிட்டதைக் காண்கிறான். ஒரு கொல்லன் தனது பட்டறையில் இரும்பை அடிப்பதில் 21 தடவையன்று, ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை கூடக் கையை மடக்கி நீட்ட நேரிடுகிறது. எனினும், அவன் மனத்தில் உள்ளது இரும்புஅடிப்பதால் கிடைக்கும் பணம். அவனுடைய நிய்யத்தாக இருப்பது பணம். ஆகையால், அவனுடைய கைகள் ஸாண்டோக்களின் கைகளைப் போல் இறுகுவதில்லை. நபிகள் நாயகம்(ஸல்) அல்லாஹ்வின் தூதர் என்ற முறையில், கற்றுக் கொடுத்த கலிமாக்களையும் அவர்கள் போதித்தருளிய தத்துவ ஞானங்களையும் அறிந்து, அவற்றின் மூலம் சரியான 'நிய்யத்து' உள்ளவர்களாகி, அந்த நிய்யத்துடன் அவற்றை உச்சரிக்கும்பொழுது, அவை பெருங்கொண்ட விருத்தியாம்சங்களை உண்டாக்குபவையாக இருக்கின்றன. அதே மொழிகளை, இத்தகைய நிய்யத்து இல்லாமல், அதற்குரிய தத்துவார்த்த விளக்கம் இல்லாமல், ஒரு நாளைக்குப் பல்லாயிரம் தடவை, வருடக்கணக்கில் சொல்லிக் கொண்டிருப்பினும், எந்தப் பயனும் ஏற்படுவதில்லை. நபிகள் நாயகம் (ஸல்) கற்றுக் கொடுத்துள்ள திக்றுகளின் தத்துவார்த்த ஞானம் இன்று முஸ்லிம் உலகில் போதிய அளவுக்கு இருப்பதாக இல்லை.

வித்து விருட்சமாவதெனின், விளையக்கூடிய இடத்தில் ஊன்றப்பட வேண்டும்; அத்துடன் அதற்கு மழையும் சூரியச் சுடரும் வேண்டும். கலிமாக்களாகிய வித்துக்கள் மானுட ஆன்மாவில் ஊன்றப்படும்பொழுது அவை விருட்சமாக வளருவதற்கும் ஓர் அருள் மழை அவசியமாக இருக்கிறது; ஒரு ஜோதிச் சுடரும் அவசியமாக இருக்கிறது. இத்தகைய அருள் மழையும் ஜோதிச் சுடரும் கிடைப்பதற்குரிய வழியாக இருப்பது ஐந்து நேரத் தொழுகை. இதனாலேயே மூன்றாவது அத்தியாயத்தில் யான் எழுதிக் காட்டியபடி திக்றுடைய உத்தரவு நபிக்கு வந்ததன் பின், தொழுகையுடைய உத்தரவும் வந்தது; ஜிப்ரயீல் (அலை) வந்து தொழுது காட்டினார்கள். ஆகையால், திக்றுடன்

தொழுகையும் இன்றியமையாதது. தொழுகையின்றி, வெறும் திக்ரு கொண்டு—உச்சாடனம் கொண்டு—எதுவும் அடைய முடியுமென்பது, மழையும் சுடரும் இல்லாமல் வித்து விருட்சமாகுமென்று விதைப்பதற்கொப்பாகும். இந்நூலில் மலரில் காட்டப்பட்டுள்ள சில திக்ரு முறைகளை கடைப்பிடித்து வருவதுடன், தொழுகையையும் விடாது அனுஷ்டித்து வாருங்கள். தொழுகையின்றி எந்த திக்ரும் பயன் அளிக்காது. தொழுகையின் தத்துவார்த்தங்கள்—நீங்கள் அறிய வேண்டியவை—ஏராளமாக இருக்கின்றன. அவைகளை அடுத்த நூலில் வாசிப்பீர்கள். அர்த்தம் தெரிந்திருப்பினும் சரி, தெரியாதிருப்பினும் சரி, உணர்ந்திராவிடினும் சரி, உங்களுக்குத் தெரிந்த அளவுக்குத் தொழுகையையும் பேணிக்கொண்டு, ஜக்காத் கடன்களையும் கொடுத்துக் கொண்டு, இந்நூலில் காட்டப்பட்டிருக்கும் திக்ரு முறைகளை அன்றாட வாழ்க்கையில் கையாள ஆரம்பிப்பீர்களாக!

## 5. அன்றாட வாழ்க்கை

மனிதனுடைய வாழ்வு என்பது நாட்கள் எனும் வளையங்களின் கோர்வையாகிய ஒரு சங்கிலி. 'காலம்' என்பது அல்லாஹ் மானிடனுக்கு அளித்துள்ள பேறுகளில் மாபெரியது. காலத்தின் அருமையை முஸ்லிம்கள் நன்கு உணர வேண்டுமென்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பினார்கள்; ஒவ்வொரு நாளும் சரியான வழியில் செலவழிக்கப்பட வேண்டுமென்று விரும்பினார்கள்.

ஒவ்வொரு நாளையும் ஒரு சிறிய வாழ்வுக்கு ஒப்பானதாக அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இருபத்து நான்கு மணிநேரத்தைக் கொண்ட ஒரு நாளில், விழிப்பு நேரமாகிய வாழ்க்கையும் இருக்கிறது; சிறிய மரணமாகிய நித்திரையும் இருக்கிறது. குர்ஆனில் ''ஸூரா ஜுமரில்'' மரணமும் நித்திரையும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கின்



றன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நித்திரைக்கு முன் ஓதுமாறு சொல்லியதும், விழித்துச் சொல்லுமாறு கற்பித்ததும், நித்திரையை மரணத்துக்கு ஒப்பிடுவதாகவும், விழிப்பை மரணத்திலிருந்து உயிர்த்தெழுவதற்கு உபமானமாகக் கூறுவதாகவும் இருக்கின்றன. ஒரு பகலை வீணாக்குவது ஒரு வாழ்க்கையை வீணாக்குவதற்கொப்பாக இருக்கிறது. இந்த உணர்ச்சி மேலிட்ட உண்மை முஸ்லிம்கள் தங்களின் ஒரு நாளையாவது வீணாக்கத் துணிவார்களா?

இவ்வாறு தூக்கத்தை ஒரு சிறிய மரணமாகவும், தூங்கி எழுந்திருப்பதைப் புதிய வாழ்வாகவும் நாம் உணர ஆரம்பித்தால், தூங்குமுன் சில நிமிடங்கள், அந்தப் பகல் எப்படிக் கழிந்தது. வீணானதா, பயனானதா என்ற தியானம் அவசியமாகி விடுகிறது. ஆகையால், தூங்குமுன் சில நிமிடங்கள் சிந்தனையில் செலவழிக்குமாறு நபிகள் நாயகம் (ஸல்) உபதேசித்துள்ளார்கள். அத்துடன் வாழ்வின் முடிவில் நாம் எத்தகைய நிலைமையில் விழிப்பு மாற விரும்புகின்றோமோ அதே மனோநிலைமையில் விழிப்பு மாறி நித்திரைக்குச் செல்ல வேண்டுமென்றும், விழிப்பு வந்ததும் ஒரு புதியவாழ்வை ஆரம்பிக்கும் உணர்ச்சியுடன் சில நிமிடங்கள் அன்றையத் திட்டங்களைப் பற்றி சிந்திக்க வேண்டுமென்றும் போதித்துள்ளார்கள்.

ஆண்டவன் அளித்துள்ள—காலம் ஆயுள்; ஆகையால் அதை அவமதிப்பதற்கில்லை; வீணாக்குவதற்குமில்லை. எனினும், மண்ணுலகிலிருந்து வெளியேறுவதற்குரிய அழைப்பும் உத்தரவும் எந்த நிமிடம் வருவதாயினும் அதற்கு முஸ்லிம்கள் தயாராக இருக்க வேண்டும். நபி (ஸல்) போதனைப்படி தினசரி வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்கள், ஆண்டவன் அளிக்கும் ஆயுளில் ஒவ்வொரு தினத்தையும் நற்பிரயோகம் செய்பவர்களாக

ஆவதுடன், எந்த நிமிடம் மண் உலகிலிருந்து மண்ணுடலை விட்டுவிட்டு, வெளியேறுமாறு, அழைப்பும் உத்தரவும் வரினும், அந்த அழைப்பை முகமலர்ச்சியுடன் ஏற்றுச் செல்பவர்களாகவும் ஆகிவிடுவார்கள்.

காலத்தின் அருமையை நபிகள் நாயகத்திடமிருந்து அறிந்த மதீனா வாசிகள் தங்களின் 24 மணி நேரத்தையும் ஒரு திட்டத்துடன் செலவழிப்பவர்களாக இருந்தார்கள். அவர்களில் வர்த்தகர்களும் இருந்தனர்; பாட்டாளிகளும் இருந்தனர். வணங்குவதற்குரிய நேரம், திக்றுக்குரிய நேரம், சிந்தனைக்குரிய நேரம், நித்திரைக்குரிய நேரம் என்று தினசரி இருபத்தி நான்கு மணி நேரத்தையும், பிரித்துக் கொண்டு, ஒரு நிமிடத்தையும் வீணாக்காது வாழ்நாட்களை நடத்தி வந்தனர். மதீனா பிளான்படி நம்முடைய வாழ்க்கையை ஒரே நாளில் நாம் திருத்தி அமைத்துவிட முடியாது. சிறுகச் சிறுகத்தான் திருத்தி அமைக்க வேண்டும். இவற்றில் ஐந்து வேளைத் தொழுகையை நம்மவர்களுள் பெரும்பாலானவர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள். பொடுபோக்காக இருந்தவர்களும் இனிமேலாவது அனுஷ்டித்துவர ஆரம்பிப்பார்களாக! அத்துடன் முதற்படியாகக் காலை மாலை, தூங்கும் முன்னும், விழித்ததும் சில நிமிடங்கள் தியானம், சில நிமிடங்கள் ''திக்று'' எனும் வழக்கத்தை முதலில் ஆரம்பிப்பார்களாக!

சடதத்துவச் சுடர் மட்டும் இல்லை; சூட்சும ஜோதியும் உண்டு என்று எழுதினோம். சடக் கண்ணுக்குத் தெரியாதிருக்கும் மலக்குகளும் உண்டு; ஜின்னுகளும் உண்டு. அருபியான ஜின் ஆயினும், மனிதர்களாயினும், அல்லாஹ்வின் உத்தரவை மீறியவர்களுக்கு ஷைத்தான்கள் என்று பெயர். மானிடர் தமது வாழ்வில் தம்மைக் கெடுப்பதற்கு முனையும் கண்ணுக்குத் தெரியும் தீயசக்திகளை மதி கொண்டும், அதற்குரிய தற்காப்பு முறைகளை கொண்டும்



தப்பித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கண்ணுக்குத் தெரியாத சக்திகளிடமிருந்து பாதுகாப்பு அடைவது எங்ஙனம்?

முஸ்லிம்கள் ''அவூதுமில்லாஹிமினஷ் ஷைத்தானிர் ரஜீம்'' என்று சொல்லுவதுண்டு. அதற்கு அர்த்தம் ''சபிக்கப்பட்ட சாத்தானை விட்டு அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்'' என்பது. என்றாலும் இங்ஙனம் கூறிக் கொண்டிருப்பின் மட்டும் காவல் கிடைக்குமா?

குர்ஆனில் ஓர் இடத்தில், ''சபிக்கப்பட்ட சாத்தானை விட்டு காவல் தேடுங்கள்'' என்று உத்தரவிட்டுள்ளான். அதே அல்லாஹ், குர்ஆனில் மற்றோர் இடத்தில், 'ஸமீஉன் அலீம்' ஆகிய அல்லாஹ்விடமிருந்து காவல் தேடுங்கள் என்று அருளியுள்ளான். இதற்கு அர்த்தம் என்ன? காவல் பெறுவதற்கு உபயோகிக்குமாறு அவனே இரு நாமங்களை—இஸ்முகளைக் கற்றுக் கொடுத்துள்ளான். அவைகளாவன: ''ஸமீஉன்'' ''அலீமுன்'' எனவே இந்த இரண்டு இஸ்முகளின் நாமங்களின் திக்று. சாத்தானின் கண்ணுக்குத் தெரியாத சகல அம்புகளையும் தட்டக் கூடிய ஒரு கேடயத்தை முஸ்லீம்களுக்கு உண்டாக்கிக் கொடுப்பதாக இருக்கிறது.

குர்ஆனின் மற்றோரிடத்தில்-''ஸூரா மூமினூனில்'' சாத்தானின் தீமையிலிருந்து விமோசனம் பெறுவதற்காக ஒரு துஆவையும் அல்லாஹ் கற்பித்துள்ளான். அந்தத் துஆ வருமாறு:

ரப்பி அவூதுபிக-மின் ஹம்ஸாதிஷ்-ஷயாதீன்-
வ-அவூதுபிக-ரப்பி அய்யஹ்ளுருன்

இதன் கருத்துரை: ''இறைவனே, சாத்தானின் ஊசாட்டங்களிலிருந்து உன்னிடம் காவல் தேடுகிறேன்.

எ-5

அத்துடன், அவை என்னிடம் அண்டுவதை விட்டும் காவல் தேடுகிறேன்.''

இந்தத் துஆவை ஒரு தடவை ஓதி அல்லாஹ்விடம் பிராத்தித்துவிட்டு, அவனது 'ஸமீஉன்' 'அலீமுன்' ஆகிய இரு நாமங்களின் உச்சாடனம் கொண்டு இத்தகைய காவலை அடைவதற்கு அவன் குர்ஆனில் உத்தரவிட்டுள்ளான் என்பதை மனதிலிறுத்திக் கொண்டு அவன் அனுமதி கொண்டு உச்சரிக்கிறோம் என்ற நினைவுடன்

பிஸ்மில்லாஹில்லதீ-லாயளுர்ரு-மஅ-இஸ்மிஹி ஷை
உன்-பில்-அர்ளி-வலா-பிஸ்ஸமாஇ-வ-ஹுவஸ்-
ஸமீ உன்-அலீம்

என்று முஸ்லிம் உச்சரிக்கும் பொழுது, இந்த இரண்டு இஸ்முகளைக் கொண்டு சுடர் ஏற்பட்டு, அண்ட நினைக்கக் கூடிய சாத்தான்களை எரித்து விடக்கூடியதா கவும், சாத்தான்கள் எறியும் அம்புகளைத் தட்டக் கூடிய தாகவும் ஆகிவிடுகிறது. ஆயினும் இவ்வாறு ஒரு தடவை சொல்லுவதுடன் இச்சுடர் உண்டாவதற்கில்லை. மாலை தூங்கும் முன்னும், விழித்ததும் மேற்கண்ட துஆவை ஒரு தடவை ஓதி, இரண்டாவதாக எழுதிக் காட்டப்பட்ட

''அஊது-பில்லாஹிஸ்-ஸமீஉல்-அலீம்-லாயலுர்ரு-
மஅ இஸ் மிஹி ஷைஉன்-பில்-அர்ளி-வ-லா-
பிஸ்ஸமாயி''

என்ற உச்சாடனத்தை 28 தடவை உச்சரிக்க வேண்டும். 28 நாட்கள் இங்ஙனம் உச்சரித்து முடித்த பின், உச்சரிப்பு உரு ஏறியதாகி விடுகிறது. 28 நாட்களுக் குப் பின், இங்ஙனம், தினசரி 28 தடவை உச்சரிக்க வேண் டியதில்லை. ஒவ்வொரு வேளையும் மூன்று தடவை உச்சரித்துவரின் போதுமானது.



இதன் அர்த்தம் வருமாது : ''நான் அல்லாஹ்வின் நாமம் கொண்டு காவல் தேடுகிறேன். அவன் 'ஸமீஉல் அலீம்' ஆக இருக்கிறான். அவன் நாமம் நம்மோடு இருக் கையில், பூமியில் இருக்கும் எப்பொருளும், வானத்தில் இருக்கும் எப்பொருளும் எந்தத் தீங்கையும் செய்ய முடியாது.

இந்த உச்சாடனத்தின் இறுதியில் 'ஸமீஉன், அலீமுன்' ஆகிய இரு நாமங்களையே குறிப்பிட்டிருப்பதைக் கவனியுங்கள். 'ஸமீஉன்' எனும் அரபிப் பதத்துக்குத் தமிழில் 'செவிசாய்ப்பவன்' என்று பொருள். 'அலீம்' என்றால் 'அறிந்தவன்' ஆயினும் தமிழில் 'செவிசாய்ப் பவன்', 'அறிந்தவன்' என்று உச்சரித்துக் கொண்டிருப்ப தால் இத்தகைய பலனை அடைய முடியாது. குர்ஆனில் காட்டப்பட்டுள்ள அதே நாமங்களை அதே தொனியுடன் அதே அட்சரங்களுடன் தொனிப்பதிலேயே புத்திக்கு எட்டாத ஒரு சுடர் உண்டாவதாக இருக்கிறது.

மாலை தூங்கு முன்னரும், காலை விழித்த பின்னரும் செய்யும் திக்ருகளில் ஒன்றாக மேலேகாட்டியதை உடனே ஆரம்பித்து 28 நாள் 28 தடவை விகிதம் ஓதி முடித்து, பிறகு மும்மூன்று தடவை உச்சரிப்பவர்களாகுங்கள். அதன் மூலம் சாத்தான் உங்களை அண்ட முடியாத பாது காப்பை, அவனது ஊசாட்டம் எனும் அம்புகள் உங்கள் மீது பாயக்கூடாத நிலையை அடைவீர்கள். இது தரீகாவின் முதற்படி.

நத்தையும் அல்லாஹ்வின் சிருஷ்டிகளுள் ஒன்று. அதில் அல்லாஹ் எத்தகைய குணத்தை வைத்திருக்கிறானென்று பாருங்கள். ஒரு நத்தையின் ஓட்டில் ஒரு ஓட்டையை உண்டாக்கிவிட்டு அந்த நத்தையை இருட்டறையில் விட்டு வைத்து, மறுநாள் அறையைத் திறந்து பார்த்தால் அந்த நத்தையின் ஓட்டில் உண்டாக்கிய ஓட்டை

காணாமல் போய் விடுகிறது. இது மேனாட்டு ஜீவ தத்துவ சாஸ்திரிகள் சோதனையில் கண்டது. என்ன ஆகிற தெனில், பொழுது விடிவதற்குள் அந்த நத்தை தன் வாயில் எச்சில் கொண்டு ஓட்டில் ஏற்பட்ட ஓட்டையை அடைத்து விடுகிறது. இவ்வாறே மனிதனுடைய சக்தி களுள், தன்னுடைய மனத்தில்—குணத்தில்—ஆத்மாவின் சூட்சும உடலில் ஏற்படக் கூடிய ஓட்டைகளை சேதங் களைத் தன் நாவின் உச்சாடனங் கொண்டு குணமாக்கி விடும் சக்தியும் ஒன்று. இந்தச் சக்தியின் பிரயோகத்துக்கு அல்லாஹ்வின் தூதர் காட்டிய வழியே 'இஸ்திக்பார்' என்பது.

'இஸ்திக்பார்' என்பதற்குப் பாவ மன்னிப்பு என்று அர்த்தம் செய்பவர்கள் உண்டு. இதுவும் இடையில் புகுந்து கொண்ட தப்பர்த்தங்களுள் ஒன்று. நபிகள் நாயகம் (ஸல்) முஸ்லிம்களை தினசரி 'இஸ்திக்பார்' செய்யுமாறு உத்தரவு மட்டும் கொடுக்கவில்லை; அவர் களே தினசரி குறைந்தது எழுபது தடவை 'இஸ்திக் பாரை' உச்சரித்து வந்ததாக ஹதீஸில் எழுதப்பட்டிருக் கிறது. அவர்களோ பாவம் அற்றவர்கள்; இருந்தும் ஏன் அப்படி உச்சரித்து வந்தார்கள்?

மானிடன் ஒரு சிருஷ்டிப் பொருள். ஆயத்துல் குர்ஸி யில் ஆண்டவனை வர்ணிக்கப்பட்டிருப்பதில்

''லா-தஃகுத்ஹூ-ஸினத்துன்-வலா-நவ்முன்''

(அவனைச் சோர்வோ நித்திரையோ அண்டுவ தில்லை) என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கு அர்த்தம், அல்லாஹ் அல்லாத சகல பொருட்களும் சோர்வுக்கும் நித்திரைக்கும் இலக்காகுபவை என்பதாகும்.

அல்லாஹ் மட்டுமே 'ஹய்யுன்'—ஜீவசக்தியை தன் னுள் குன்றாது அடைந்திருப்பவன்; இதரப் பொருட்கள்



அங்ஙனமன்று. அவைகளுக்கு ஆண்டவன் சிருஷ்டித்துக் கொடுக்கும் அளவுக்குத்தான் ஜீவியம் என்பது உண்டு; ஆகையால், சகல ஜீவப் பொருள்களையும் ஜீவன் அடையச் செய்பவனாக இருப்பவன்—'கய்யூம்'—அவன் ஒருவனே!

அல்லாஹு-லாயிலாஹ-இல்லாஹுவல்
ஹய்யுல்கையூம்-லாதஃக்ஹுதுஹு சினத்துன்-
வலாநவ் முன்லஹு-மாபிஸ்ஸமாவாத்தி-வமாபில்
அர்வி-மன்தல்லதீ-யஷ்பகுஇந்தகு இல்லா பி
இத்னிஹீ யஃலமு-மா-பய்ன அய்தீஹிம்-
வமாகல்பஹும்-வலாயுஹித்தூன-பி-ஷையின்
மின்-இல்மிஹி இல்லாபி-மாஷா-அ-வஸியஹ்
குர்ஷியுஹுஸ்-ஸமாவாத்தி-வல்அர்ள-
வலாயஊதுஹூ-ஹிப்லுஹுமா-
வஹுவல்அலிய்யுல்அலீம்.

நபிகள் நாயகம் (ஸல்) பாவம் அற்றவர்கள். எனினும் மானிடராகையால், அவர்களுக்கு அவர்கள் அடைந் திருந்த சுடர்களை நற்பிரயோகம் செய்தபொழுது சோர்வு ஏற்படுவதும், அதற்காக அவர்கள் சொற்ப நித்திரை செய்வதும் இன்றியமையாததாக இருந்தது; அங்ஙனமே, ஏற்பட்ட ஆத்ம பக்திச் சோர்வின் நிவர்த்திக் காக ''இஸ்திக்பார்'' உச்சாடனமும் செய்து வந்தார்கள்.

இதே ஆயத்துல்-குர்ஸியில் நான்கு இஸ்முகள்—தெய்வ நாமங்கள்—காட்டப்பட்டிருக்கின்றன. ஆண்டவ னுக்குச் சோர்வும் நித்திரையும் கிடையாது என்று சொல் லப்பட்டிருப்பதற்குமுன்''ஹய்யுல் கய்யூம்' என்ற இரண்டு இஸ்முகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு இஸ்முகளையும் கொண்ட இஸ்திக்பார் நித்திரைக்கு முன்

உச்சாடனத்திற்கு ஏற்றதென்பதற்கு இது சான்று. ஆயத்துல்-குர்ஸிய்யின் பிற்பகுதியில், அல்லாஹ்வின் ஆட்சி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்துடன் பாதுகாப்புப் பற்றிப் பேசுவதுடன் 'அலிய்யுல்-அளீம்' என்ற இரண்டு இஸ்முகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆட்சி அல்லாஹ்வுக்குரியது. அவனுடைய அடிமை என்ற முறையில், பிரதிநிதி என்ற முறையில், அவனுடைய பாதுகாப்புக்கு உட்பட்டு, மனிதன் தனக்குக் கொடுக்கப்பட்ட உலக விஷயங்களில் ஆட்சி செய்பவனாக இருக்கிறானல்லவா? அவ்வாறு உலகில் அவன் ஈடுபடுவது அவனது விழிப்பு நிலையில்—பகலில், எனவே, காலை நேரத்தில், பகற்பொழுதையும் உலகக் காரியங்களையும் ஆரம்பிக்குமுன், இஸ்திக்பார் செய்வதில் அலிய்யுல்-அளீம்' சைக்கினையும் ஆயத்துல் குர்ஸியில் இருக்கிறது. ஹதீஸில் காட்டப்பட்டுள்ள இஸ்திக்பார்களில் சில இஸ்திக்பார்களில் 'ஹய்யுல் கய்யூமும்', சில இஸ்திக்பார்களில் 'அலிய்யுல்-அளீமும்' இருக்கின்றன.

இதற்கு மேலே விவரித்துக் காட்டப்பட்ட பாதுகாப்புக்குரிய திக்ருடன், தினசரி தூங்குமுன் 70 தடவை இஸ்திக்பாரையும், விழித்ததும் 70 தடவை இஸ்திக்பாரையும் முஸ்லிம்கள் வழக்கமாக உச்சாடனம் செய்து வர வேண்டும். நித்திரைக்குச் செல்லுமுன் 70 தடவை உச்சாடனம் செய்ய வேண்டிய இஸ்திக்பார்.

''அஸ்தக்பிருல்லாஹல்லதீ வாயிலாஹ
இல்லாஹுவல் ஹய்யுல்-கய்யூம் வ--அதூபு-
இலைஹி'' என்பதாகும்.

விழித்ததும் 70 தடவை உச்சாடனம் செய்ய வேண்டிய இஸ்திக்பார்:

''அஸ்தக்பிருல்லாஹில் அலிய்யுல் அளீம்'' என்பதாகும்.



முதலாவதாகச் சாத்திரனின் கண்ணுக்குத் தெரியாத அம்புகளிலிருந்து விமோசனம் பெறுவதற்குரிய இஸ்முகளைக் கொண்ட உச்சாடனத்தை—ஹதீஸில் உள்ளதை—எழுதிக் காட்டியுள்ளேன். ஏனெனில், உங்களைச் சுத்தி கரிக்கும் வேலையை நீங்கள் ஆரம்பித்து நடத்திக் கொண்டிருக்க, மறுபுறம் சாத்தான்கள் அசுத்தங்களை உங்கள் மீது எறிந்து கொண்டு அவை உங்களின் ஆன்மாக்களின் மீது பட்டுக் கொண்டிருந்தால் என்ன பிரயோஜனம்? இரண்டாவது, ஒவ்வொரு பகல் பொழுதும் இரவுப் பொழுதும் ஏற்படக்கூடிய சக்தி விரயம், சோர்வு, தளர்ச்சி, பலஹீனங்களில் நிவர்த்திக்குரிய திக்ரு முறையாகிய இஸ்திக்பாரைக் காட்டினேன். அதுவும் ஹதீஸில் உள்ளதுதான். ஏனெனில், ஒருபுறம் கட்டிக் கொண்டு போகையில் தினசரி மறுபுறம் உண்டாகும் ஓட்டைகளை அடைத்துக் கொண்டு போகாவிட்டால் என்ன பிரயோஜனம்?

அப்படியாயின் இதுகாறும் அஞ்ஞானத்தில் இருந்தோமே, கையை உபயோகிக்காது சில மணி நேரம் வைத்தால் கை செத்து விடுகிறதே. இதிகாறும் உபயோகிக்காதிருந்த காரணத்தினால் ஏற்பட்டுள்ள வாதம், ஆத்ம உறுப்புக்கள் சோம்பிய நிலை ஆகியவற்றுக்குப் பரிகாரம் என்ன என்று நீங்கள் வினவலாம். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய பரிகாரம் தான் 'தவ்பா' என்பது. 'தவ்பா' எனும் பதம் 'தாப' எனும் மூலத்திலிருந்து பிறந்தது; அதன் அர்த்தம், திரும்புதல், மீளுதல் என்பதாகும். தான் செல்ல வேண்டிய இடத்துக்குரிய நேரான வழியை விட்டுவிட்டு, நகருக்குச் செல்வதற்குப் பதிலாக புலி, கரடி, பாம்புகள் நிறைந்த கடும் காட்டுக்குச் செல்லும் வழியில் ஒருவன் சென்று கொண்டிருக்கிறான்; தான் செல்லுவது பூங்காவனங்கள் நிறைந்த நகருக்கு என்று மனப்பால் குடித்துக் கொண்டே அழிவின் பக்கம் சென்று கொண்டிருக்கிறான். அப்பொழுதுதான் திடுமென

அவன் கண் திறக்கிறது. உடனே, விட்டுவிட்ட பாதைக்கு மீளுகிறான்; அழிவின் பாதையில் அதற்கு மேலும் நடக்காமல் நேரிய வழிக்கு வந்து விடுகிறான். அதற்குத் தான் 'தவ்பா' என்பது, அழிவின் பாதையில் தொடர்ந்து நடந்து கொண்டு, எத்தனை தடவை ருத்திராட்ச மாலையைக் கையில் வைத்துக் கொண்டு ''நான் நல்ல வழிக்கு மீளுகிறேன்; தவ்பா செய்கிறேன்'' என்று கூறிக் கொண்டிருப்பினும், அவனைப் பற்றி என்ன சொல்வீர்கள்? அவனுடைய நாவு 'மீளுகிறேன்; திருந்துகிறேன்' என்று கூறிக் கொண்டு, கால் கெட்ட விலங்கினங்கள் இருக்கும் காட்டின் பக்கமே சென்று கொண்டிருப்பின், அவனைப்பற்றி என்ன நினைப்பீர்கள்? 'தவ்பா' என்று அரபியில் உருப் போட்டது போதும். சென்று கொண்டிருக்கும் தவறிய—நாச—வழிகளிலிருந்து துரிதத்தில் வெளியேறி, 'ஸிராத்துல் முஸ்த்தகீம்' எனும் நேரிய வழிக்கு வந்து விடுங்கள்!

நீங்கள் சென்று கொண்டிருக்கும் போக்கு சரிதானா? அப்படியாயின், இம்மையில் குருடர்களாக இருப்பவர்கள் மறுமையிலும் குருடர்களாக இருப்பார்களென்று அல்லாஹ் எச்சரித்துள்ளானே. உங்களின் அகக் கண்கள் திறந்திருக்கிறதா? என்று உங்களையே கேளுங்கள். 'மரணத்திற்கு முன் மரிப்பவர்களாகுங்கள்' என்று ஒரு ஹதீஸ் உண்டு. இந்த ஹதீஸின் கருத்து என்ன? மரணம் வந்து பூத உடலிலிருந்து சூட்சும உடலாகிய ஆத்துமா பிரியுமுன். ''மலக்குல்—மௌத்து'' வந்து பூத உடலுக்கும் சூட்சும உடலுக்கும் உள்ள தொடர்புக் கம்பியைக் கத்தரித்து விடுமுன், அந்த சூட்சும உடல், மனிதனின் அசல் பொருளாகிய ஆத்மா எத்தகையது, அதன் உறுப்புக்கள் என்ன என்பதை அறிந்து, உடலைச் சுத்தமாகவும் சுகமாகவும் வைத்திருப்பது போல் அந்தச் சூட்சும உடலையும் சுத்தமாகவும் நோயின்றிச் சுகமாகவும் வைத்திருக்க) பூத உடலிலிருந்தும், பூத உலகிலிருந்தும், பிரிவது



எங்ஙனம் என்பதை அனுபவத்தில் அறிந்து, அதற்குரிய பண்பாட்டை அடைய வேண்டுமென்பதுதான். அத்தகைய பண்பாட்டை அடைந்திருப்பின் நீங்கள் மரணத்துக்கு ஒரு பொழுதும் அஞ்சமாட்டீர்கள்.

''இன்னாலில்லாஹி'' (திண்ணமாக நாங்கள் அல்லாஹ்வுக்குரியவர்கள்) 'வ-இன்னா-இலைஹி-ராஜிஊன்' (திண்ணமாக நாங்கள் அவன் அளவில் திரும்புகிறவர்கள்) என்று உண்மையிலேயே கூறும் மூஸ்லிம்களாக நீங்கள் இருப்பின், அல்லாஹ் அளவில் திரும்புவதற்கு அச்சப்படுவீர்களா? உங்கள் நெஞ்சில் கைவைத்துக் கொண்டு உங்கள் ஆத்மாவிடம் கேளுங்கள், இன்று அல்லாஹ்வின் அழைப்பு வந்தால், பயணத்துக்கு—மரணத்துக்குத் தயாரா? என்று உங்கள் மனம் ''இல்லை'' என்று கூறினால், உங்களின் நிலைமை சரியல்லவென்று உணர்ந்து, சரியான நிலைக்கு 'மீளுங்கள்; திரும்புங்கள்'—அதுதான் தவ்பா என்பது.

'பல்லாண்டுகள் எனது சூட்சும உடலை வாடவிட்டு விட்டேனே, பல்லாண்டுகள் அகக் கண்ணைக் குருடாக விட்டுவிட்டேனே, ஆத்மீக விஷயத்தில் வாதம் அடித்த கதையாகவல்லவா என் கதை இருக்கிறது!' என்ற உணர்வு உங்களுக்கு வந்தால் கவலைப்படாதீர்கள். ஏனெனில், தெரியாதிருந்த நீங்கள் தயாராகிவிடும். அதே நிமிஷத்தில், நிவர்த்தி செய்வதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 'ஷபாஅத்' இருக்கிறது. மஹ்ஷர் மைதானத்துக்குப்பின் நடக்க வேண்டி நேரிடும்; ''ஸிராத்துல் முஸ்த்தகீம்'' பாலம் என்று சொல்கிறார்களே, அதனுடைய காலம் இன்னும் தூரத்தில் இருக்கிறது. உலகிலும் ''ஸிராத்துல் முஸ்த்தகீம்'' உண்டு: அது அருள் அடைவதற்குரிய மார்க்கம்; அதில் நடப்பவர்கள் 'அன்அம்த்த அலைஹிம்' ஆக இருக்கிறார்கள். அதற்கு நேர்

மாற்றான—கோணலான வழிகளும் இருக்கின்றன? அவற்றில் நடப்பவர்கள் 'மஃளூபி அலைஹிம்' ஆவார்கள்; அவைகள் அல்லாஹ்வின் கோபாக்கினியை அடைவதற்குள்ள மார்க்கங்கள்.

'ழால்லீன்' என்றால் வழி தெரியாதவர்கள் என்பது பொருள். ''ழால்லீன்'' என்பதற்கு ஒருமை ''ழால்'' என்பது. வழிதெரியாது இருந்த காரணத்தினால் அமுதைதினம் உட்கொள்ளுவதற்குப் பதிலாக நஞ்சுகளை அருந்திக் கொண்டவர்கள் என்ன செய்வது என்று வினவுவீர்களோ? பயிற்சி அளிக்கும் பிதா அற்றிருந்தோமே? வழிகளைக் காட்டி உதவக் கூடிய குரு இல்லாது இருந்தோமே என்று மலைப்பீர்களோ? மலைக்க வேண்டாம். இத்தகையவர்களுக்கும் எம்பிரான் (ஸல்) அவர்களின் சுன்னத்தில் படிப்பினை இருக்கிறது. நபிகள் நாயகமும் பிதா அற்ற, குரு அற்ற அனாதையாகத்தான் இருந்தார்கள். நபிகள் நாயகமும் 'ழால்' ஆகத்தான் இருந்தார்கள். அவர்களிடம் அல்லாஹ் என்ன கூறினான்?

''அலம் யஜித்க-யதீமன் பஆவா-வ-வஜதக ழால்லன்
பஹதா, வ-வஜதக-ஆயிலன்-பஅஹ்னா''

'நீங்கள் அனாதையாக இருந்த நிலைமையில் அவன் அடைக்கலம் அளிக்கவில்லையா? நீங்கள் வழி தெரியாது இருந்த நிலைமையில் வழிகாட்டி அருளவில்லையா? நீங்கள் தேவையுள்ளவர்களாக இருந்த நிலையில் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து செல்வத்தை அளிக்கவில்லையா?' என்பது இந்த ஆயத்துக்களின் அர்த்தம். இந்த ஆயத்துக்களில் இரண்டாவது ஆயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ் 'ழால்' என்று அழைத்திருக்கிறான். 'ழால்' என்ற பதத்தின் பன்மை தானே 'ழால்லீன்' என்பது. அனாதையானதால் சரியான பயிற்சி கிடைக்காதவர்கள் மீது என்ன குற்றம்?



சரியான குருக்கள் இல்லாததால் வழி அறியாதவர்கள்மீது என்ன தோஷம்? பக்கபலமும் ஆதரவும் இல்லாக் குறையால் ஏழைகளாக இருப்பவர்கள் மீது என்ன குறை? ஆகையால்தான், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸூரா பாத்திஹா ஓதுகையில், 'ழால்லீன்' என்ற பதத்தை உச்சரிக்கையில், அவர்களின் கருணை நிறைந்த உள்ளம் வழி தெரியாதிருந்தவர்களின் பால் கருணை சுரக்க உருக்கத்துடன் அந்தப் பதத்தை உச்சரித்து, அந்த பதத்தை உச்சரிக்கும் பொழுதெல்லாம், அவர்களுக்கு வழி தெரிய வேண்டுமென்றும், தெரிந்து திருந்திவிட்டால் அவர்களின் சென்ற காலக் குறைகளின் தோஷங்கள் தங்களின் ஷபாஅத் கொண்டு நீங்கி, அவர்கள் ''ஸிராத்துல் முஸ்த்தகீம்'' எனும் வழியில் சுலபமாக நடக்க வேண்டுமென்றும் விரும்பியவர்களாக, அவர்கள் உள்ளம் உருகி இறைவனிடம் மன்றாடும் நிலைமையில் நினைத்து வந்தார்கள். அதைப் பின்பற்றித்தான் 'வலழ்ழால்லீன்' என்பதை உருக்கத்துடனும் நீட்டியும் உச்சரிக்கும் மாமூல் ஆரம்பமாயிற்று.

தெரிந்து, திரிகரண சுத்தியுடன், முற்றிலும் திருந்தத் தயாராகிவிடின், சென்ற காலத் தோஷங்கள், நபியின் ஷபாஅத் எனும் மின்சாரச் சுடர்பட்டு ஒரே நிமிஷத்தில் அழிந்து விடக் கூடியவையாகஇருக்கின்றன. இக்கருத்தை புகட்டும் திருக்குர்ஆன் ஆயத்துடன் கலிமாவின் தத்துவார்த்த விளக்கத்தை முடிக்க விரும்புகிறேன்.

''தவ்பா செய்யுங்கள்;'' அதாவது, தெரிந்து திருந்துவதற்குத் தயாராகும் நாட்டம் உண்டாகட்டும். நாட்டம் என்பதற்கு அரபியில் 'இராதத்' என்று பெயர். நாட்டம் வைப்பவனுக்குப் பெயர் 'முரீது'. அடைய நாடும் பொருளுக்கு 'முராது' என்று பெயர். சென்ற கால தோஷ நிவர்த்தியுடன் 'ஸிராத்துல்' முஸ்த்தகீமில் நடப்பது—மதீனா பிளான்படி அமைவது—''முராது'' ஆக இருக்

கட்டும். உண்மையிலேயே உங்கள் இராதத் (நாட்டம்) திரிகரண சுத்தியுள்ளதாக இருப்பின், அந்த நிமிடத்தி லேயே சென்ற காலத்துத் தீயவினைப்பயன்கள் இல்லாது போய்விடும். அதே நிமிடத்திலிருந்து புதிய ஏடு போடுங் கள்! புதிய வாழ்க்கையை ஆரம்பியுங்கள்! ஸிராத்துல் முஸ்த்தகீமில் நடக்க ஆரம்பியுங்கள்! ஸிராத்துல் முஸ்த்த கீமின் மூன்று பெரும் நிபந்தனைகள் : (1) திக்றுல்லாஹி (2) தொழுகை (3) ஜக்காத்.

மேற்கண்ட இரு திக்றுகளில், சாத்தானை விட்டு பாதுகாப்புப் பெறும் திக்று 28 நாளைக்கு 28 விகிதம்; பிறகு தினமும் மூன்று விகிதம். இதற்கு அர்த்தம் 28 நாளில் உரு ஏறி உங்களுக்குச் சாத்தானின் அம்புகளைத் தட்டும் சக்தி உண்டாகும் வரை உங்களைச் சாத்தான் அண்ட முடியும் என்பதன்று. உங்கள் 'இராதத்' சரியாக இருப்பின், தவ்பா உண்மையானதாக இருப்பின் 28 நாட் களுக்குள் உங்கள் சுய பலம் உண்டாகி அதைக் கண்டு சாத்தான் உங்களுக்கு அஞ்சும் நிலை வரும்வரை ரஸூலின் ஷபாஅத் உங்களைக் காப்பாற்றும்.

இறுதியாக, மேலே யான் குறிப்பிட்ட கருணையின் செய்தியுள்ள ஆயத்து வருமாறு :

''குல்-யாஇபாதி யல்லதீன அஷ்ரபு-
அலா அன்பு ஸூஹூம் லாதக்னத்து-
மிர் ரஹ்மத்தில்லாஹி-இன்னல்லாஹ-
யக்புருல் து னூப-சமீஅன்-இன்னஹூ ஹூவல்-
கபூருர் ரஹீம்-வஅனீபு-இலாரப்பிக்கும்-வ- அஸ்லிமூ-
லகு-மின்கபுலி-ஜ-யஹ்தியஹூமுல்-அதாபு-
தும்மலா-துன்ஸரூன்-வதப்பிஉ அஹ்ஸன-
மா உன்ஸில இலைக்கும்-மிர்ரப்பிக்கும்-



மின் கப்லி ஐ யஹ்தியக்குமுல் அதாபு-பஹ்த
தன்-வ-அன்த்தும் லா தஷ்குரூன்''

கருத்துரையாவது : ''நபியே, சொல்லுவீராக! தங் களின் ஆத்மாக்களைக் கேடுகளுக்கு ஆளாக்கிவிட்ட அடி யார்களே, அல்லாஹ்வின் கருணைப்பற்றி நம்பிக்கை இழந்து விடாதீர்கள்! நிச்சயமாக அல்லாஹ் சகல தோஷங்களையும் நிவர்த்தித்து அருளக் கூடியவன். குறை களை நிவர்த்தி செய்து கருணைமாரி பொழியக் கூடி யவன்.

''உங்கள் இறைவனளவில் திரும்புங்கள்; அவன் சட்டங் களுக்குக் கட்டுப்படுங்கள்; 'அதாபு' எனும் செய்த வினை களின் பலாபலன்களை ரசிக்கும் கட்டம் வருமுன், அங்ங னம் செய்யுங்கள். அக்கட்டம் வந்தபின் உங்களுக்கு உதவி செய்யப்பட மாட்டாது!''

''நீங்கள் தெரியாதிருக்கும் நிலைமையில் திடுமென அதாபு வருமுன், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கி இருப்பவற்றில் உள்ள நல்ல விஷயங்களைப் பின்பற் றுங்கள்.''

''இஹ்தி னஸ்ஸிராத்தல்முஸ்தகீம்-ஸிராதல்லதீன அன் அம்த அலைஹிம்-ஹய்ருல்மஃலூபி ?அலைஹிம் வலல்லாலீன்''.

## 6. முக்கியமான சில ஹதீஸ்கள்

ஈமான், இஸ்லாம், தொழுகை, அன்றாட வழிமுறை கள், ஆகியவற்றை விவரித்து, எச்சரிக்கைகளையும் ஏவல் விலக்கல்களையும், தீர்க்க தரிசனங்களையும் காட்டும் மிக முக்கியமான முப்பத்து மூன்று ஹதீஸ்கள் இங்கே தரப்பட் டுள்ளன. சகல ஹதீஸ்களையும் ஒரே பெரும் கிரந்தத்தில் இமாம் ஸூயூத்தி (ரலி) அவர்கள் திரட்டினார்கள்

இவற்றை இந்தியாவில் உதித்த பெரும் முஹத்திஸ் ஆகிய 'ஷைய்கு அலாவுத்தீன் அலி இப்னு ஹிஸாமுத்தீன்' விஷயவாரியாகக் 'கன்ஜுல் உம்மால்' எனும் பொக்கிஷ நூலுள் கொண்டு வந்தார்கள். அதற்கு அவர்களே ஒரு சாராம்ச நூலும் எழுதியுள்ளார்கள். இம்மூன்று பெரும் தொகுப்புகளிலிருந்து இந்த ஹதீஸ்கள் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கின்றன.

''ஈமான் என்றால் என்ன?'' என்று ஜிப்ரயீல்(அலை) கேட்டார்கள்.

அதற்கு நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் அருளினார்கள்: ''அல்லாஹ் மீதும், இறுதி நாள் மீதும், மலக்குகள் (அமரர்கள்)மீதும், கிதாபு(சட்டம்)மீதும், நபிகள்மீதும் மரணத்தின் மீதும், மரணத்துக்குப்பின் உள்ள ஜீவியத்தின் மீதும், கேள்வி கணக்கு மீதும், (மீஜான்) நிறை போடப்படுதல், சகலவற்றின் அளவை (கதர்) ஆகியவற்றின் நன்மை தீமை நிர்ணயமாக இருக்கிறதென்பதன் மீதும் நம்பிக்கை இருப்பின் ஈமான் உள்ளவர்கள் ஆவீர்கள்.'' (மஸ்னது இமாம் அஹ்மது இப்னு ஹம்பல், நிஸாயி, இப்னு அஸாக்கிர்)

''இஸ்லாம் என்றால் என்ன?'' என்று ஜிப்ரயீல் (அலை) கேட்டார்,

அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்: ''இஸ்லாம் என்பது உங்கள் ஜீவியத்தை அல்லாஹ்வுக்கு அடிபணியச் செய்வது; ''லாயிலாஹ இல்லல்லாஹு''—வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் தவிர யாரும் இல்லை என்பது ஏற்ப; ''முஹம்மதுர் ரஸூலுல்லாஹி—முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதர் என்பதை ஒப்புக் கொள்வது; தொழுகையை நிலை நிறுத்துவது; ஜக்காத் கொடுப்பது; ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பது; இயன்றவர்கள் ஹஜ்ஜு செய்வது, இவற்றை



பூர்த்தி செய்வதால் முஸ்லிம் ஆவீர்கள்'' (மஸ்னது இமாம் ஹம்பல், நஸாயீ, இப்னு அஸாக்கிர்)

''இஹ்ஸான் என்றால் என்ன?'' என்று ஜிப்ரயீல் (அலை) வினவினார்.

அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்: ''அல்லாஹ்வை நேரில் கண்டால் எத்துணை அச்சம் ஏற்படுமோ அத்துணை அச்சம் உள்ளவர்களாக இருப்பது இஹ்ஸான். நீங்கள் அவனைப் பார்க்கவில்லைஎன்பதுஉண்மையே. எனினும் அவன் உங்களை பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வில் அச்சம் இருத்தல் வேண்டும். அப்பொழுதே இஹ்ஸான் எனும் மோன்னத நிலைமை ஏற்படும்'' என்று கூறினார்கள். (மஸ்னது இமாம் அஹ்மது இப்னு ஹம்பல், நிஸாயீ, இப்னு அஸாக்கிர்)

''ஈமான் என்பதில் எழுபது சொச்சம் அம்சங்கள் உண்டு. அவற்றில் உச்சமானது 'லாயிலாஹ இல்லல்லாஹு' என்ற சொல்லில் உள்ள தத்துவத்தை உணர்வதாகும்; அவற்றில் அதிகக் கீழானது. வழியில் ஒரு முள் கிடப்பின், அந்த முள் வழியில் நடக்கக்கூடியவர்களின் காலில் படக்கூடுமென்ற நினைவில் அந்த முள்ளை எடுத்தெறிந்து விடுவது போன்ற சிறிய சேவையாகும்'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளினார்கள். (முஸ்லிம், அபூதாவூது, நஸாயீ, இப்னுமாஜா)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கர்ஜித்தார்கள்; ''உங்கள் தலையை நிமிர்த்தியவர்களாக, எதற்கும் அஞ்சாதவர்களாக, ''லாயிலாஹ இல்லல்லாஹு'' என்றும், ''அல்ஹம்துலில்லாஹி'' என்றும், கூறுங்கள்.''

பிறகு இரு கரங்களையும் தூக்கி, இறைவனை நோக்கி, ''அல்லாஹ்வே, இச்சொற்களுடன் என்னைத் தோற்றுவித்திருப்பவன் திண்ணமாக நீயே! இச்சொற்கள் நிலைக்குமாறு எனக்கு உத்தரவும் செய்துள்ளாய்,

இவற்றைக் கொண்டு ஏற்பட வேண்டிய பேறுகளைப் பற்றியும் வாக்குகள் அளித்துள்ளாய். வாக்கு மாறுபவன் நீயன்று'' என்று மொழிந்தார்கள்.

அதன்பின், ஸஹாபாக்களை நோக்கி, ''உங்களுக்கு சுப சோபனம் கூறுகிறேன். அல்லாஹ் உங்களின் குறைகளின் பாவங்களையும் ஈனங்களையும் நிவர்த்தித்து அருளியுள்ளான்'' என்று அருளினார்கள். (மஸ்னது இமாம் ஹம்பல், திப்ரானி)

நபிகள் நாயகம்(ஸல்)மொழிந்ததாவது:''எவனுடைய கரத்தில் எனது ஆத்மா இருக்கிறதோ அவன்மீது ஆணையாகக் கூறுகிறேன். எதுவரை தனக்கென விரும்பும் நன்மையை அடியான் தனது சகோதரனுக்கும் விரும்பவில்லையோ அதுவரை அந்த அடியான் ஈமான் கொண்டவனாகமாட்டான்.'' (இப்னு மாஜா, மஸ்னது இமாம் ஹம்பல்)

''அனுஷ்டானம் (அமல்) இல்லாத ஈமானும், ஈமான் அற்ற அனுஷ்டானமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.'' (திப்ரானி)

''ஈமான் சம்பூர்ணமாக உள்ளவர்கள் யார்? உயரிய குணம் உள்ளவர்களும், தங்களுடைய குடும்ப வாழ்வில் சிறந்த முறையில் நடந்து கொள்பவர்களுமே!''(திர்மிதீ)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளினார்கள்: ''மூமினின் (ஈமான் உள்ளவனின்), கண்கள், அவன் எந்த அல்லாஹ்வின் ஜோதிக் கொண்டு சிருஷ்டிக்கப்பட்டுள்ளானோ அந்த ஜோதியாலேயே பார்ப்பவைகளாக இருக்கின்றன.

''மூமினுடைய நாவில் மலக்கு பேசுகிறார்; காபிருடைய நாவில் ஷைத்தான் பேசுகிறான். மூமின் அல்லாஹ்



வின் (ஹபீப்) அன்பனாக இருக்கிறான்; அவனுக்கு ஆக வேண்டியவற்றை அல்லாஹ்வே செய்கிறான்.

''மூமினுடைய குணங்கள் யாவை? பேசும் போது அவன் பேச்சு ஒழுக்கமானதாக இருக்கும்; செவிசாய்ப்பதிலும் ஒழுக்கமாக இருப்பான்;சந்திக்கும்போது முகமலர்ச்சியுடன் சந்திப்பான்; வாக்குகள் கொடுத்தால் அவற்றை நிறைவேற்றுவான்'.

(அத்-தைலமீ)

''மூன்று விஷயங்களைக் கைக்கொள்ளுமாறு உத்தரவிடுகிறேன்; மூன்று விஷயங்களை விட்டு விடுமாறும் கட்டளையிடுகிறேன். (1) அல்லாஹ்வின் தொண்டர்களாகுங்கள்; அதில் ஆண்டவனுக்கு இணை துணையாக எப்பொருளையும் வைக்காதீர்கள். (2) அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப் பிடித்து கொண்டவர்களாக ஒன்றுபடுங்கள்; பிரிவினைகளுக்கு இலக்காகாதீர்கள். (3) யாரிடம் தலைமைப் பொறுப்பை கொடுக்கிறீர்களோ அவர்கள் சொல்லுக்குச் செவிசாயுங்கள்; கீழ்ப்படியுங்கள். இங்ஙனம் அல்லாஹ் உத்தரவிட்டுள்ளான்.

''நான் உங்களைத் தடுக்கும் காரியங்களாவன: (1) அவர்கள் சொன்னார்கள், இவர்கள் சொன்னார்கள் என்ற வீண் பேச்சுக்கள். (2) தேவையற்ற வினாக்களும் வீண் கேள்விகளும் (3) கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை விரயம் செய்தல்.'' (அபூ நயீம்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நாள் பள்ளிவாயிலுக்குள் புகுந்த சமயத்தில் ஸஹாபாக்களில் சிலர் விதி மதி பற்றிய குதர்க்கம் செய்து கொண்டிருந்தனர். ''மூளைக்கு எட்டாத விஷயங்களில் ஏன் வீண் விவாதம் செய்கிறீர்கள்! உங்களுக்கு முந்தியிருந்த வேதக்காரர்கள்

பலர் இத்தகைய விவாதங்களால் நாசமடைந்துள்ளார்கள்'' என்று மொழிந்தார்கள். (இப்னு ஜுரைர்)

''சிலர் எதுவரை வினாக்களை விடுக்கிறார்களெனின், சிருஷ்டியை அல்லாஹ் சிருஷ்டித்தான். அல்லாஹ்வைச் சிருஷ்டித்தது யார் என்று கேட்கும் அளவுக்கு அவர்களிடம், ''அல்லாஹு அஹதுன்'' (அல்லாஹ் ஏகன்!) ''அல்லாஹுஸ்ஸமது'' (அல்லாஹ் சிருஷ்டிக்கப்படுதல் முதலிய சிருஷ்டியின் குணங்களுக்குப் புறம்பானவன்!) லம்-யலிது (அவனிலிருந்து அவனைப் போன்ற பொருள் பிறப்பதற்கும் இல்லை!) வ-லம்-யூலது (அவன் மற்ற எப்பொருளிலிருந்து பிறந்தவனும் இல்லை!) வ-லம்-யகுன் லஹு-குப்வன்-அஹது (அவனுக்கு நிகராக எப்பொருளும் இல்லை, இருக்கவும் முடியாது) என்று கூறுங்கள்.

''அதற்கு மேலும் மனத்தில் சந்தேகம் இருப்பின் அது சாத்தானின் ஊசாட்டம் என்பதை உணர்ந்து இடதுபுறம் மூன்று தடவை துப்பி, சாத்தானை விட்டுப் பாதுகாப்புப் பெறும் உச்சாடனத்தை ஓதுங்கள்,'' (அபூ தாவூது)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்: ''மூமினுக்குள்ள விதிவசம் அதிசயமானது) நன்மை ஏற்படின் அல்லாஹ்வைப் புகழுவான்; (ஷுக்ர்) நன்றி செலுத்துவான். தீங்கு ஏற்படினும் அதுவும் அவன் சித்தமெனக் கொண்டு அவனைப் புகழுவான்; (ஸபுர்) பொறுமையைக் கடைப்பிடிப்பான். ஆகையால், அவனுடைய ஜீவியத்தில் ஒவ்வொரு காரியமும் அல்லாஹ்வின் நற்கூலிக்கு உரித்தானதாகி விடுகிறது.''(மஸ்னது இமாம் ஹம்பல்)

''ஆதமுடைய மக்கள் தங்களுக்கென்று எழுதப்பட்டுள்ள ரிஜ்க் (பேறு)களைக் கண்டு அரண்டு ஓட முயன்றாலும்—மரணத்துக்கு அரண்டு அதிலிருந்து தப்பித்தோட முயற்சிப்போரை எப்படி மரணம் துரத்திப் பிடிக்கிறதோ' அப்படியே—ரிஜ்க் அவர்களைத் துரத்திப் பிடிப்பதாக இருக்கிறது.'' (அபூ நயீம்)



ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அருளினார்கள்: ''அல்லாஹ் கூறுகிறான்; ஆதமுடைய மக்களே, உங்களுடைய ஆத்மாவில் என்னை நீங்கள் ஞாபகப்படுத்தினால் நானும் உங்களை ஞாபகப்படுத்துவேன். உச்சத்தில் எனது ஞாபகத்தை நீங்கள் வைத்தால், அதைவிட உச்சத்தில் நான் உங்களை ஞாபகப்படுத்துவேன். என்னை நீங்கள் ஒரு சாண் நெருங்கினால், நான் உங்களை ஒரு முழம் நெருங்குவேன். நீங்கள் என்னளவில் நடந்துவர ஆரம்பித்தால், நான் உங்கள் அளவில் ஓடி வருவேன்.'' (மஸ்னத் இமாம் அஹ்மது இப்னு ஹம்பல்)

நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: திக்றுகளில் சிரேஷ்டமானது, லாயிலாஹ இல்லல்லாஹு.'' (திர்மிதி, நிஸாயீ)

''அல்லாஹ்வின் திக்று (ஞாபகம்) நோய் நிவர்த்திக்கு அமுதாக இருக்கிறது; மனிதனின் ஞாபகம் நோயாக இருக்கிறது.'' (பைஹக்கீ)

''மரிக்கும் தருவாயில் உங்களின் நாவில் அல்லாஹ்வின் நாமத்துடைய உச்சரிப்பின் ஈரப்பசை இருப்பதை அல்லாஹ் அதிகம் உகப்பவனாக இருக்கிறான்.'' (இப்னு ஹுப்பான்)

''அல்லாஹ்வின் ஞாபகக் கிறுக்கு உள்ளவன் (மஜ்னூன்) என்று பிறர் உங்களைக் கூறும் அளவுக்கு அல்லாஹ்வின் (திக்று) ஞாபகத்தை அதிகரித்துக் கொண்டிருங்கள்''(மஸ்னது இமாம் ஹன்பல்ஹாக்கிம், பைஹக்கீ)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளினார்கள்: ''கியாம நாளில் அடியார்களிடம் முதலில் கேள்வி கணக்கு கேட்கப்போவது தொழுகையைப் பற்றி, அதைப் பூர்த்தி செய்தவர்களாக இருப்பின், பூர்த்தியுள்ளவர்கள் என்று எழுதப்படும். பூர்த்தி செய்யாதவர்களாயின், அல்லாஹ் மலக்குகளிடம் 'பாருங்கள், என்னுடைய அடியானென்றால் யான் விதித்த கடமையைப் பூர்த்தி செய்ய வேண்டாமா?' என்று கூறுவான். பிறகு, ஜக்காத் பற்றிய கேள்வி கணக்கு நடக்கும், பிறகு இதர செய்கைகளின் கணக்குகள் கேட்கப்படும்.'' (அபூ தாவூது, இப்னுமாஜா, மஸ்னது இமாம் அஹ்மது இப்னு ஹம்பல்)

''தனது அடியார்கள் மீது ஐந்து நேரத் தொழுகைகளை அல்லாஹ் விதித்துள்ளான். அவற்றின் நிபந்தனைகளின்படி அவற்றைப் பூர்த்தி செய்துள்ளவர்களைச் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வதாக அல்லாஹ்வின் வாக்கு இருக்கிறது. பூர்த்தி செய்யாதவர்களைப் பற்றிய வாக்கு இல்லை. நாடினால் தண்டிப்பான்; நாடினால் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வான்.'' (அபூ தாவூது, நிஸாயீ, மஸ்னது இமாம் அஹ்மது இப்னு ஹம்பல்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த இறுதி வஸிய்யத்துக்களில் ஒன்று: ''தொழுகை விஷயத்தில், அல்லாஹ்வுக்கு அஞ்சி நடவுங்கள்! தொழுகை விஷயத்தில் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடவுங்கள்! தொழுகை விஷயத்தில் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடவுங்கள்! பலமற்ற இருவர்களின் விஷயத்திலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; ஒன்று விதவை; மற்றது அனாதைப் பிள்ளை.'' (பைஹகீ)

''நமக்கும் அவர்களுக்குமிடையில் உள்ள உறுதிப்பாடு தொழுகைதான். எவன் தொழுகையை விட்டானோ அவன் காபிர் ஆகிவிட்டான்.'' (திர்மிதி, நஸாயி, மஸ்னது இமாம் அஹமது இப்னு ஹம்பல், இப்னு மாஜா)



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்: ''அல்லாஹ் கூறுகிறான்: தொழுகையில் பாதி எனக்குரியது; பாதி என்னுடைய அடியானுக்குரியது. என்னுடைய அடியான் கேட்பவைகளும் அவனுக்குரியவை.''

''அடியான் அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்'' என்னும்போது அல்லாஹ், ''எனது அடியான் என்னைப் புகழ்கிறான்'' என்கிறான். ''அர்ரஹ் மானிர் ரஹீம்'' எனும்போது ''எனது அடியான் என்னைத் துதிக்கிறான்'' என்கிறான். 'மாலிக்கியவ்மித்தீன்' எனும் போது 'அடியான் என்னை அறிந்திருக்கிறான்' என்கிறான். 'இய்யாக்க-நஃபுது-வ-இய்யாக்க-நஸ்த்தயீன்' என்னும்போது 'இது எனக்கும் எனது அடியானுக்கும் உரிய விஷயம், அவன் கேட்பது அவனுக்குரித்தாகட்டும்'' என்கிறான். (மஸ்னது இமாம் ஹம்பல், முஸ்லிம்)

''உங்களின் பொருட்களை 'ஜக்காத்' கொண்டு பாதுகாப்புப் பெறச் செய்யுங்கள்'' உங்களின் நோய்களை 'ஸதக்கா' கொண்டு நிவாரணம் செய்யுங்கள்; 'பலா' (சோதனை) ஏற்படும் பொழுது தாழ்மையுடன் துஆ (பிரார்த்தனை) செய்து உதவி தேடுங்கள்''என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளினார்கள், (அபூதாவூது)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''முயற்சிகளில் சிறந்தது ஹலால் (ஆகுமானது) சம்பாதிப்பதும், சம்பாத்தியங்களில் அதிக சுத்தமானது, மனிதன் தன் கரம் கொண்டு உழைத்து சம்பாதிப்பதும் சகல நேர்மையான வர்த்தகங்களுமாகும்'' (மஸ்னது இமாம் அஹ்மது இப்னு ஹம்பல், திப்ரானி, ஹாக்கிம்)

''மூமின் ஆகிய அடியானின் நுட்பம் உள்ள கைத்தொழிலாளியாக இருப்பவனை அல்லாஹ் நேசிக்கிறான்'' (திப்ரானீ, பைஹகீ)

''திண்ணமாக அல்லாஹ்வும் அவனது ரஸூலும், ஈராயம், செத்தவை, பன்றி, சிலை" ஆகியவற்றின் விற்

பனையை ஹராம் ஆக்கியுள்ளார்கள்.'' (புகாரி, முஸ்லிம், அபூ தாவூது, திர்மதீ, நிஸாயீ, இப்னு மாஜா, மஸ்னது இமாம் ஹம்பல்)

''ஐந்து விஷயங்கள் ஏற்படும்முன் நீங்கள் செய்து கொள்ள வேண்டிய ஐந்து விஷயங்கள் உண்டு. மரணம் ஏற்படுமுன் ஜீவியத்தையும், நோய் அணுகுமுன் ஆரோக்கியத்தையும், வேலை அதிகமாகுமுன் உள்ள ஓய்வையும், வயோதிகம் வருமுன் வாலிபத்தையும், ஏழ்மைத்தனம் வருமுன் செல்வத்தையும் நற்பிரயோகம் செய்து கொள்ளுங்கள்'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உபதேசித்தார்கள். (ஹாக்கிம், பைஹகீ)

பெருமானார் (ஸல்) அவர்கள் எச்சரித்ததாவது: ''உங்களுக்கு முன்னிருந்தவர்களின் முன் மாதிரியை நீங்கள் பின்பற்றுவீர்கள்; ஒரு சாணுக்கு ஒரு சாண், ஒரு முழத்துகுள் ஒரு முழம்—அப்படியே நடப்பீர்கள். ஆகையால், அவர்கள் ஆளான தவறுகளுக்கு இரையாகாது எச்சரிக்கையாக இருங்கள்''

ஸஹாபாக்கள், ''யஹூதிகளையும் நஸாராக்களையுமா குறிப்பிடுகிறீர்கள்?'' என்று வினவினார்கள்.

''வேறு யாரை'' என்று பதிலளித்தார்கள் நபிகள் நாயகம். (புகாரி, முஸ்லிம், மஸ்னது இமாம் ஹம்பல்)

பெருமானார் (ஸல்) அவர்கள் எச்சரித்ததாவது: ''பனீ இஸ்ராயீல் சமுதாயத்துக்கு நிகழ்ந்த அனுபவங்கள் எனது உம்மத்துக்கும், ஒரு பாதக் குறட்டுக்கு ஜோடியாக மறு பாதக்குறடு இருப்பது போல் ஏற்பட்டுத் தீரும், பனீ இஸ்ராயீல் எழுபத்தி இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தனர். எனது உம்மத்து எழுபத்தி மூன்று பிரிவுகளாகப் பிரியும், இவர்களுள் எழுபத்தி இரண்டு பிரிவுகள் நரகத்துக்கு உரியவர்கள்; ஒரு பிரிவு மட்டும் நரகத்திலிருந்து விமோசனம் பெற்றிருக்கும். அப்பிரிவு நானும் எனது ஸஹாபாக்களும் எந்த வழியில் இருக்கிறோமோ அந்த வழியில் இருந்து வரும்.'' (திர்மதீ)



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளினார்கள்: ''மூன்று விஷயங்களை எனது உம்மத்துக்காக அல்லாஹ்விடம் கேட்டேன். இரண்டை அல்லாஹ் கொடுத்தருளினான்; மூன்றாவதை ஏற்க மறுத்து விட்டான். பிற சமூகத்தினர் எனது உம்மத்தை மிகைப்பது முடியக்கூடாத விஷயமாக வேண்டும் என்றேன். 'சரி' என்றான். பிரளயங்களால் எனது உம்மத்து அழியக்கூடாது என்றேன். 'சரி' என்றான். மூன்றாவதாக, எனது உம்மத்தில் சிலரின் வினைப் பயன்கள் மற்றவர்களைப் பாதிக்கக் கூடாது என்றேன். அது முடியாத காரியம் என்று பதில் வந்தது.'' (இப்னு மாஜா)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எச்சரித்தார்கள்: ''எனக்குப் பின்னால் எனது உம்மத்தில் ஒரு சமூகம் உண்டாகும்; அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். எனினும் குர்ஆன் அவர்களின் தொண்டைக்குள் இறங்காது. முஸ்லிம்களுடன் அவர்கள் சண்டை போடுவார்கள். சிலை வணங்குபவர்களுடைய உதவியைக் கோருவார்கள். வில்லிலிருந்து அம்பு வெளியாகி விடுவது போல் அவர்கள் இஸ்லாத்திலிருந்து வெளியாகி விடுவார்கள். அவர்களை நான் கண்டால் கொலை செய்து விடுவேன்.'' (புகாரி, முஸ்லிம் அபூதாவூது, நிஸாயி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்துள்ள தீர்க்க தரிசனங்களுள் ஒன்று : ''காலத்தின் ஒரு நாள் மட்டுமே எஞ்சியிருப்பினும் கூட, என்னுடைய வம்சத்தில் ஒருவரை அல்லாஹ் தோற்றுவித்து அநியாயம் நிறைந்த உலகில் நியாயம் நிறையும்வரை அந்த ஒரு நாளை ஒரு யுகமாக (அல்லாஹ்) நீடிக்கச் செய்து விடுவான்'' (அபூ தாவூது, மஸ்னது இமாம் ஹம்பல்)

''பிறகு கிழக்கிலிருந்து கறுப்புக்கொடி உயர்த்தப்படுவது பற்றிச் செய்திவரும்; அக்கோஷ்டியின் தலைவரைக் கண்டால் பைஅத் செய்யுங்கள்; பனி மலைகளின் மீது தவழ்ந்து செல்ல நேரிடினும், அவரிடம் ஓடுங்கள். ஏனெனில், அவர் அல்லாஹ்வின் கலீபா ஆகிய மஹ்தீ ஆக இருப்பார்'' (இப்னுமாஜா, ஹாக்கிம்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய சுபச் செய்திகளுள் ஒன்று வருமாறு: ''எனது உம்மத்தில் இருகோஷ்டியினரை அல்லாஹ் நரகத்திலிருந்து பாதுகாத்து அருளுவான். ஒரு கோஷ்டி ஹிந்தில் (இந்திய உபகண்டத்தில்) சத்தியப் போர் தொடுக்கும் கோஷ்டி; மறு கோஷ்டி மர்யமுடைய மகன் ஈஸா (அலை) கூட நிற்கப்போகும் கோஷ்டி;'' (மஸ்னது இமாம் ஹம்பல், நிஸாயீ)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எச்சரித்தார்கள்: ''ஒரு காலம் வரும். அப்பொழுது, குர்ஆனின் எழுத்து மட்டும் இருக்கும் (கருத்து இருக்காது); பெயரளவில் தான் இஸ்லாம் இருக்கும். இஸ்லாத்தின் பெயர் சூட்டிக் கொண்டிருப்பவர்களைப் போல் யாரும் இஸ்லாத்திலிருந்து தூரமாக இருக்கமாட்டார்கள்; பள்ளிகளின் கட்டடம் சிறப்பாக இருக்கும். எனினும் சரியான வழிகாட்டுதலின்றிக் கெட்டுக் கிடக்கும். அக்காலத்தில் உள்ள பிக்ஹு ஆசிரியர்களை (மார்க்க நிபுணர்களை) விட அதிகம் கெட்ட (புகஹா) பிக்ஹு ஆசிரியர்கள் வானத்தின் நிழலின் கீழ் இருந்ததில்லை; சகல (விஷமங்கள்) பித்னாக்களும் அவர்களிடமிருந்து ஆரம்பித்து அவர்களளவிலேயே மீண்டு கொண்டிருக்கும்.'' (அத்தைலமீ)

''இரு விஷயங்களை விட்டுச் செல்கிறேன். அவை இரண்டையும் பற்றிப் பிடித்துக் கொண்டால் வழி தெரியாதவர்களாகவும் சறுகியவர்களாகவும் ஆகமாட்டீர்கள். ஒன்றாவது, அல்லாஹ்வின் மறை (குர்ஆன்); இரண்



டாவது எனது முன்மாதிரி (ஸுன்னத்து) சுவர்க்கத்தில் 'கௌதா' எனும் அருவிக் கரையில் என்னை வந்து சந்திக்கும் வரையில் இவ்விரண்டிலிருந்தும் பிரிந்து விடாதீர்கள்'' என்று நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் அருளினார்கள்' (ஹாக்கிம்)

''எவர்கள் மாலையில் மூன்று தடவை பிஸ்மில்லா ஹில்லதீ - லா - யளுர்ரு-மஅ - இஸ்மிஹி-ஷைஉன்-பில்-அர்லி-வலா-பிஸ்ஸமா- இ-வ-ஹுவஸ்-ஸமீஉன் - அலீம் என்று உச்சரித்து வருவார்களோ அவர்களுக்கு காலை வரை கார்மானம் உண்டு. எவர்கள் இதைக் காலையில் மூன்று தடவை உச்சரித்து வருவார்களோ அவர்களுச்கு மாலைவரை பாதுகாப்பு உண்டு. (அபூதாவூது)

நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள்: ''அல்லாஹ்மீது சத்தியமாக ஒவ்வொரு நாளும் எழுபது தடவைக்குக் குறையாமல் அல்லாஹ்விடம் இஸ்திக்பார் தேடுபவனாகவும் அவன் புறம் மீளுபவனாகவும் யான் இருந்து வருகிறேன். [புகாரி]

''இஸ்திக்பார் என்பது ஈனங்களை அழித்துவிடுவதாக இருக்கிறது.''

''நோய்களையும் மருந்துகளையும் பற்றிக் கூறட்டுமா? உங்களின் பாவங்கள் நோய்கள் ஆகும். அவைகளுக்குரிய மருந்து ''இஸ்திக்பார்'' ஆகும். [அத்தைலமீ]

பெருமானார் [ஸல்] அவர்கள் மொழிந்தார்கள்; ''ஸுபுஹு நேரத்தில் எழுந்ததும், அல்லாஹும்ம [அல்லாஹ்வே!] பிக்க-அஸ்பஹ்னா [உன்னைக்கொண்டு ஸுபுஹின் விழிப்பை அடைந்துள்ளோம்]. வ-பிக்க-அம்ஸைனா [உன்னைக் கொண்டே எங்களுக்குப் பொழுதும் அடையும்]. வ-பிக்க-நஹ்யா [உன்னைக் கொண்டே நாங்கள் உயிர் பெற்றிருக்கிறோம்], வ-பிக்க-நமூத்து

[உன்னைக் கொண்டே நாங்கள் மரணம் அடைவதற்கும் இருக்கிறோம்]. வ-இலைக்கல்-மஸீர் [நாங்கள் திரும்பும் இடம் உன்னளவிலேயே இருக்கிறது]'' என்று கூறுங்கள். [திர்மதீ]

## 7. சமுதாயம் தழைத்தோங்கிட!

நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் உலகில் தோன்றிய சமயத்தில் அளித்த போதனைத் தத்துவங்கள் பல. அவைகளிற் சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

1. ஆத்ம ஞானியாவதற்கும், அகக்கண் திறப்பதற்கும் ஆண்டனை அறிவதற்கும் யாரும் இல்லறம் துறந்து குகை வாசமோ வன வாசமோ செய்ய வேண்டியதில்லை, அதற்குரிய ஸிராத்துல்-முஸ்த்தகீமை, நேரிய சுருக்கமான வழியை அனுஷ்டித்தால், இல்லறத்தில் இருந்து கொண்டு உலகக் காரியங்களிலும், உலகச் சம்பாத்தியங்களிலும் ஈடுபட்டுக் கொண்டே தினசரி ஐந்து நேரமும் கண்டிப்பாகச் சில நிமிடங்கள் விகிதமும், 'நபில்' ஆகச் சொற்ப நேரமும் செலவழிப்பதன் மூலம் சர்வ ஞானத்தையும் அடைய முடியும்.

2. ஒரு மனிதனுடைய அல்லது சமுதாயத்தினுடைய சென்ற காலம் அறியாமையினால் பாழாகி இருப்பினும் அது பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. செய்த கருமங்களுக்குப் பட்டுத் தொலைத்து ஜென்மம் எடுத்து அனுபவிக்க வேண்டுமென்பதில்லை. உண்மை கண்டு, உண்மையிலேயே திருந்திவிடத் தயாராகிவிடின், சென்ற காலத்தின் நன்மைகள் மட்டும் தங்கித் தீமைகள் அழிந்து விடுவதற்குரிய 'ஸிராத்துல்-முஸ்த்தகீமும்' உண்டு.

3. கல்விக்குரிய வயது பால்ய வயதும் வாலிப வயதும்தான். ஆளானதும் உலகப் பொறுப்பைச் சுமக்க ஆரம்பிக்கையில் கல்வி பயில முடியாதென்றும் மக்கள் நினைத்துக் கொண்டிருந்தனர். கல்விக்கு வயது என்பது கிடையாது. வயோதிகத்தில் கூட, உலகப் பொறுப்புக்களுடன், சொற்ப நேர முயற்சியால் கல்வியை அடைந்து விட முடியும்.



மதீனாவில் உண்டான சமுதாயத்தினர் முற்போக்குத் திட்டம் என்று சிறுவர்களுக்கு கல்வி ஏற்பாடு செய்யும் பள்ளிக்கூடங்களை மட்டும் உண்டாக்கி இருப்பின் என்ன ஆகி இருக்கும்? நபிகள் நாயகம் [ஸல்] அவர்களுக்கு மறு தலைமுறையில்தான் சமூக முன்னேற்றம் ஆரம்பித்திருக்கும். நபிகள் நாயகம் (ஸல்) என்ன செய்தார்கள். வருங்காலத்தைக் காப்பாற்ற வேண்டிய மறுதலைமுறையாகிய சிறுபிள்ளைகளுக்கு மட்டும் கல்வி அளிக்க ஏற்பாடு செய்யவில்லை. அன்றைய சமுதாயத்தினராக இருந்த ஆடவர், பெண்டிர், வாலிபர், வயோதிகர் அனைவருடைய கல்விக்கும் ஏற்பாடு செய்தார்கள். தத்தம் பிழைப்புகளை நடத்திகொண்டு, தினசரி அந்தந்த வேளையில் சில நிமிடங்கள் ஆத்ம ஜோதி பெறுவதற்குரிய வணக்கத்தில் செலவழிக்க வேண்டுமென்றும், சொற்ப நேரம் கல்வி அபிவிருத்திக்குச் செலவிட வேண்டுமென்றும் உத்தரவிட்டார்கள். ''தலபுல்-இல்மி-பரீளதுன்-அலா-குல்லி-முஸ்லிமின்-வ - முஸ்லிமத்தின்!'' ''கல்வி தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் ஆண் பெண் மீதும் பர்ளு ஆக—விதியாகிறது'' என்பது ஹதீஸ். இந்த நாயக வாக்கியம் உங்களுக்குப் புதிதன்று. எனினும், நீங்கள் உணர வேண்டியது என்னவெனில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெறும் வாய் வேதாந்தியாக இருந்தவர்களன்று, சொல்லியபடி செய்து காட்டியவர்களாக இருந்தார்கள் என்பதைத்தான். ஒவ்வொரு முஸ்லிமும் கல்வி அடைந்து தீர வேண்டுமென்பது வெறும் உபதேசமாக அன்று இருந்ததில்லை. மதீனாவில் உடனே நடைமுறையில் வந்த விஷயம். அல்லாஹ்வின் பிரதிநிதி விதித்த பர்ளு—விதி! அரசாங்கச் சட்டத்துக்கு

இக்காலத்தவர்கள் கொடுக்கும் மதிப்பை விட மதீனா வாசிகள் அன்று நபிமொழிக்கு அதிக மதிப்புக் கொடுத்து வந்தார்கள். எனவே, இந்த நபிமொழியின் செய்தி அன்றைய மதினா நகர் மக்களுக்கிடையில் பரவிவிட்ட நிமிடத்திலிருந்து மதீனா நகரில் ''கட்டாயக் கல்வி'' அமுலுக்கு வந்துவிட்டது.

இந்த உத்தரவு மதீனாவில் பிரகடனமான சமயத்தில் சில ஸஹாபிகள் நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் சந்நிதானத்துக்கு வந்து கல்வி தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் மீது பர்ளு என்று உத்தரவிட்டிருக்கிறீர்கள்! வயதானவர்களும், தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களும், வயோதிகர்களுமா கல்வி கற்க வேண்டும்? அல்லது இந்த உத்தரவு வயது வராதவர்களைப் பற்றியதுதானா? என்று கேட்டார்கள். அதற்கு நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள், ''தொட்டிலிலிருந்து கபுறுக்குச் செல்லும்வரை'' கல்வி கற்க வேண்டும் என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். கல்விக்குரிய வயது என்று ஒன்றும் இல்லை. எந்த வயதாகிலும், எந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பினும் தினசரி சொற்ப நேரம் கல்வி அடையும் முயற்சியும் நடக்க வேண்டும் என்று கூறினார்கள்.

அன்றைய மதீனாவில் பத்திரிகைகள் கிடையா. அச்சு நிலையம் கிடையாது. எழுத்துத் தெரிந்தவர்கள் அபூர்வம். மாதக்கணக்கில் நிலைமை மாறிவிட்டது. அனைவரும் வாசிக்கக் கூடியவர்களாகவும் எழுதக் கூடியவர்களாகவும் ஆகிவிட்டனர். குர்ஆன் அச்சுப் பிரதிகள் இல்லாத நிலையில், அனைவரும் கைப்பட குர்ஆன் அத்தியாயங்களை எழுதிவைத்து கொண்டனர். ஸுப்ஹு நேரத்தில் சுமார் அரை மணி நேரம் தினசரி குர்ஆன் அத்தியாயங்களை படித்து அதில் உள்ள கருத்துக்களை சிந்திப்பதில் செலவழித்து வந்தனர். ஸஹாபாக்களில் குர்ஆனை ஒரு நாளைக்கு ஒரு ஜுஸ்வு ஆக வாசித்துக் கருத்துணர்ந்து



கொண்டவர்களும் இருந்தனர். இன்னும் அதிக நேரத்தை அர்ப்பணம் செய்ய முடிந்தவர்கள் ஏழு நாளைக்கொரு முறை குர்ஆன் முழுவதையும் படித்து முடித்து வந்தனர். உதாரணமாக, ஹஜ்ரத் உதுமான் (ரலி) அன்றைய மதீனாவில் பெரும் வர்த்தகராக இருந்து வந்தார்கள். அவர்கள் தமது வர்த்தக ஜோலிகளுடன் ஏழு நாளைக்கொரு தடவை கிரமமாகக் குர்ஆன் வாசித்து முடித்துக் கொண்டிருந்தார்கள்.

''ஹிரா குகையில்'' எம்பெருமான் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முதலாவதாக இறைவன் புறத்திலிருந்து வந்த ஐந்து ஆயத்துக்களில்—வசனங்களில்—நான்காவது வசனத்தில் எழுதுகோல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ''எழுதுகோல் கொண்டு அறிவித்தவன் இறைவனே! எழுத்தை அறிவித்தவனும் இறைவனே'' என்று சொல்லப்பட்டது.

இரண்டாவதாக வெளிவந்த ஸூரா 'நூன்' எனும் காண்டத்திலுள்ள முதல் ஐந்து வசனங்களில் முதல்வசனம் ''நூன்-வல்-கலமி.வ-மா-யஸ்த்துரூன்,' என்பதாகும். இதில் 'நூன்' எனும் அட்சரம் பற்றியும், தொனி பற்றியும், எழுதுகோல் பற்றியும், எழுதப்படுபவை பற்றியும் சிந்திக்குமாறு ஆண்டவன் உத்தரவிட்டுள்ளான்.

எழுதத் தெரியாதிருந்த ஒரு சமுதாயத்தினருக்கிடையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், குர்ஆன் வசனங்கள் வெளியானதும், எழுதுகோலை உபயோகிக்கத் தீவிரமாகப் பிரச்சாரம் ஆரம்பித்தார்கள். அவர்களின் பிரசாரம் பரவியபொழுது முஸ்லிம்கள் ஆகிய ஒவ்வொருவரும் அறிவு தேடுபவர்களாகவும் எழுதுகோலை உபயோகிப்பவர்களாகவும் ஆகிவிட்டனர்.

ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் வாயிலாக உலகுக்கு முதலில் அளிக்கப்பட்ட பல

போதனைகளை இன்று முஸ்லிம்கள் லட்சியம் செய்வதாக காணோம். மேனாட்டவர்தான் அவைகளை கடைபிடித்து வருகின்றனர்.

நம்மவர்களின் பிற்போக்கு மூலகாரணம் கல்வி இன்மை. ஆண்டவனின் உத்தரவு ஏற்பட்டு நபிகள் நாயகமே தங்களின் அறிவை அதிகரித்துக் கொண்டு, தங்களைச் சேர்ந்தவர்களையும் பண்படுத்த முயன்றார்கள் அல்லவா! 'ரப்பி-ஜித்னீ-இல்மா!' (இறைவனே! எனது ஞானத்தை மென்மேலும் அதிகரிப்பாயாக) என்று பிரார்த்தனை செய்யுமாறு அவர்களுக்கு அல்லாஹ் உத்தரவிட்டு, அவர்கள் அதற்குரிய முயற்சிகளுடன் இந்தத் துஆவை ஓதி வந்தார்களல்லவா! நபிகள் நாயகமும் ஸஹாபாக்களும் தினசரி சொற்ப நேரம் அறிவு அபிவிருத்திக்குச் செலவழித்து வந்திருக்க, நாம் ஏன் அங்ஙனம் செலவழிக்கக் கூடாது? இரவில் தூக்கத்தில் ஒரு மணி நேரத்தைக் குறைத்துக் கொள்வது முடியாத காரியமா?

கல்வி கற்பதில் தினசரி சில நிமிடங்களாயினும் ஈடுபட்டு வரவேண்டும் என்று உபதேசித்த நபியின் ஆத்மா சந்தோஷப்பட வேண்டுமானால், அவர்களுக்கு உகந்த இருளை அகற்றி அருள் பெருகச் செய்யும் காரியத்தில் பங்கெடுத்துக் கொள்வோமாக! பிரியாணியாக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தது போதும், அவர்கள் சாப்பாட்டுப் பிரியராக இருந்தவர்களல்ல. அவர்கள் விரும்பியது அருள், அருளை அடைந்தார்கள். தான் அடைந்ததை மற்றவர்கள் பெற வேண்டும் என்று விரும்பினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆண்டவனிடமிருந்து மூன்றாவதாக வந்த திருக் குர்ஆன் வசனங்கள் ''ஸூரா முஜம்மில்'' எனும் காண்டத்தின் ஆரம்பத்திலுள்ளவைகளாகும். அந்த வசனங்களில்,



''யா-அய்யுஹல்-முஜ்ஜம்மிலு! குமில்லைல-இல்லா
கலீலன், நிஸ்பஹூ-அவின்குஸ்-மின்ஹூ கலீலா.
அவ்-ஜித்-அலைஹி வரத்திலில்-குர் ஆன-தர்த்திலா.
இன்னா-ஸனுல்கீ-அலைக்க-கவ்லன்-தக்கீலா!''

''போர்வை போர்த்திக் கொண்டிருப்பவர் போல். அபாரமான ஜோதியாம்சங்களைக் கொண்டிருந்தும் அவை வெளியாகாது மறைத்துக் கொண்டு இருப்பவரே! உங்களிடம் மறைந்துள்ள அம்சங்கள் வெளியாக வேண்டியிருக்கின்றன. அதற்குரிய முயற்சியாக இரவில் சிறிது நேரம் தவிர மற்ற நேரத்தில் விழிப்புடன் இருப்பீராக! இரவில் பாதி அல்லது அதிலும் குறைந்த ஒரு பகுதியில் விழித்திருக்க வேண்டும்; அல்லது பாதிக்கு அதிகமாகக் கூட விழித்திருக்கலாம். இவ்வாறு விழித்து. கற்றுக் கொடுக்கப்படும் குர்ஆன் வசனங்களைத் தியானித்து அவற்றின் கருத்துக்களையும் தத்துவங்களையும் சரியான நிறையுடன் அறிந்து கொள்வீராக! இவ்வாறு முயற்சிக்கின், குர்ஆன் பதங்களில் உள்ள கனம் நிறைந்த கருத்துகளின் உதிப்புக்களை உமக்குக் கொடுத்தருளுவோம்.'' இந்த மூன்றாவது உத்தரவு வந்ததிலிருந்து, உலகிலிருந்து மறையும் வரை, எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இரவு நித்திரையைக் குறைத்துக் கொண்டவர்களாக இருந்தார்களே! ஸுன்னத்து என்று சொல்லுகிறார்களே இந்த ஸுன்னத்தை—முன் மாதியை—சிந்தித்து அதன்படி இரவில் தூக்கத்தைக் குறைக்காவிடினும்—ஹைர்—நேரத்தில் விழித்து, ஸுபுஹு வரை, அறிவை வளர்ப்பதில் ஏன் செலவிடக்கூடாது?

கல்வி என்று நபிகள் நாயகம் கூறியது குர்ஆன் ஞானத்தை மட்டுமன்று! அல்லாஹ் கொடுத்தருளிய விசேஷ ஞானமும் வேண்டும்; உலக ஞானமும் வேண்டும். இதனாலேயே,

உத்லுபுல்-இல்ம-வ-லவ்-பிஸ்ஸீன்!

'கல்வி சீனத்தில் இருப்பினும், "அதை அடைய வேண்டும்' என்று உத்தரவிட்டார்கள். இதற்கு அர்த்தம் கிணற்றுத் தவளைகளாக இருக்கக்கூடாது. கல்வியை முன்னிட்டு பிறமொழிகளைப் படிக்கவும் பிறநாடு செல்லவும் தயாராக இருக்க வேண்டுமென்பதே யாகும்.

நம்மவர்களின் நிலைமை மாறுவதென்றால், மறு தலைமுறையிலும் முன்னேற்றம் இருப்பதற்காகப் பின்னால் தலை எடுக்கவிருக்கும் நம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கக் கூடிய ஸ்தாபனங்களும் வேண்டும். அத்துடன், இன்றைய சமுதாயத்தினருக்குரிய கல்வியை அளிப்பதற்காகத் தொழிலில் ஈடுபடாத நேரங்களில் கல்வி அளிக்கும் ஸ்தாபனங்களும் வேண்டும்.

இங்ஙனம், மேலே நாம் எழுதிக் காட்டிய நபி உத்தரவுகளைத் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் நிறைவேற்ற விரும்பினால், அதற்குரிய திட்டம் என்ன?

முதலாவதாக பாலர் முதல் முதியவர்கள் வரை யாவரும் இரவில் சிறிது நேரம் ஸுபுஹு வேளையில் சிறிது நேரமும் கல்விக்கு அர்ப்பணம் செய்யத் தயாராக வேண்டும். ஸுபுஹு தொழுததும் அரைமணி நேரம் அரபி கற்கவும், குர்ஆனை அர்த்தத்துடன் ஓதி உணரவும் செலவழிக்க வேண்டும். தினசரி சில நிமிடங்கள் தினசரிப் பத்திரிகைகளை வாசிப்பதற்குக் செலவிட்டு வருவதை வழக்கமாகக் கொள்ள வேண்டும். தலையங்கங்கள், முக்கியச் செய்திகள் படிப்பதற்குப் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் செல்லாது. இரவில் ஒரு மணி நேரம் அல்லது வாரம் மூன்று தினங்களில் ஒரு தினத்துக்கு ஒரு மணி நேரம் உலகக் கல்விக்கு செலவிட வேண்டும். பள்ளி வாயில்களில் ஸுபுஹு நேரத்தில் அரபி, குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடும், உலகக் கல்வி அளிப்ப



தற்குரிய இரவுப் பாடசாலைகளும் உண்டாக்கப்பட வேண்டும்.

நமது ஊக்கம் சோடா பாட்டில் 'புஸ்'ஆக முடியாமல், சமூக முன்னேற்றம் எனும் ரயில் வண்டியை நடத்துவிக்கும் நீராவி ஊக்கமாக இருக்குமாறு கவனித்துக் கொள்வதும் அவசியமாகும்.

சமூகக் காரியங்கள் என்றால் சமூகத்தில் உள்ள அனைவரும் சிரத்தை கொள்ள வேண்டியவைகளாக இருக்க வேண்டும். நேற்று இருந்தவர்கள் நேற்றுச் செய்ததை, இன்று இருப்பவர்கள் தொடர்ந்து நடத்த வேண்டும்; நாளை வருபவர்களும் அதை நாளை தொடர்ந்து நடத்த வேண்டும். அவ்வாறு முயற்சிகள் செய்யப்படுவது சமூகத்தில் உள்ள அனைவருடைய சிரத்தையுடனும் ஊக்கத்துடனும் நடைபெற வேண்டும்.

ஆயினும் பொதுவாக நடந்து வருவது என்ன? ஒரு சிவர் ஊக்கத்துடன் எழுந்து ஒன்றை ஆரம்பிப்பார்கள். இவ்வாறு முன்வரும் உழைப்பாளிகளை அல்லது நன்கொடையாளர்களைப் பொதி சுமக்க விட்டுவிட்டு மற்றவர்கள் தத்தம் ஜோலிகளிலேயே கவனமாக இருப்பார்கள். இன்று சிலருக்கு உடலில் சுகம், மனத்தில் உற்சாகம், ஜேபியில் கனம் இருந்து, அவர்கள் ஊக்கத்துடன், பொதி சுமக்க முன்வரலாம். நாளை மரணம், அசௌக்கியம், கவலை, வாழ்வில் மாறிவரும் ஏற்றத்தாழ்வு வரும் பொழுது அவர்கள் கவனிக்க முடியாது போய்விடுகிறது. அச்சமயத்தில் வேலையைத் தொடர்ந்து நடத்துவதற்கு சிரத்தை எடுப்பதற்கு பொறுப்பைத் தாங்குவதற்கு மற்றவர்கள் சமயத்தில் முன் வருவதில்லை. இது ஒரு பெருங்குறை; நம் சமூகத்தைப் பிடித்துள்ள நோய்களில் ஒன்று. இந்த நோய் நிவர்த்தியாகாதவரை, இனி ஆரம்பிக்கும் விஷயங்களின் கதையும் பழைய கதையாகவே முடியும்.

நீங்கள் உங்களுக்கு எதை விரும்புகிறீர்களோ அதைப் பிறருக்கும் கொடுங்கள் என்பது நபி போதனை. மனிதர்களில் தவறுகளும் குறைகளும் இல்லாதவர்கள் யார்? நாம் செய்த தவறுகளை அல்லாஹ் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்றும், நாம் செய்யும் நன்மைகளுக்கு அல்லாஹ் கூலி கொடுக்க வேண்டுமென்றும் விரும்புகிறோமல்லவா?

சமூகம் என்பது அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் சித்தப்படி நடப்பதாக இருக்க வேண்டும்.

''யதுல்லாஹி-பௌக்கல்-ஜமா-அத்''

(ஜமாஅத் என்ற சமூகம் உண்மையிலேயே சமூகத்துக்குரிய லட்சணத்தை அடைந்துவிடின் அதன்மீது அல்லாஹ்வின் ஆசீர்வாதம் எனும் கரம் இருந்து தீரும்) அல்லாஹ் எப்படிக் குறைகளைப் பொறுத்து நன்மைகளுக்கு மறக்காது கூலி கொடுக்கிறானோ அங்ஙனமே, சமூகமும் அல்லாஹ்வை முன்னிட்டுத் தனக்குச் சேவை செய்தவர்களின் குறைகளை மறந்து அவர்களுடைய நன்மைகளுக்கு நன்றியுள்ளதாக இருக்க வேண்டும்,

''மன்-லம்-யஷ்க்குருன்னாஸ-லன்-
யஷ்க்குருல்லாஹ்''

என்பது ஒரு ஹதீஸ். எவர்கள் மனிதர் செய்த நன்மைகளை மறந்து அதற்கு நன்றியறிதல் உள்ளவர்களாக இல்லையோ, அவர்கள் அல்லாஹ்வின் அருட்கள் விஷயத்திலும் நன்றி கெட்டவர்களாகத்தான் இருப்பார்கள் என்பது பொருள்.

சென்ற காலத் தவறுகளைப்பற்றி முஸ்லிம்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஒரு முயற்சி



செய்து அது தோல்வியானால் உடனே தளர்ச்சி அடைவது முஸ்லிமின் குணமன்று. ஏற்பட்ட தோல்வியின் காரணம் என்ன, விஷயம் தவறிவிட்டதன் காரணம் என்ன என்பதை உணர்ந்து நிலைமையைத் திருத்துவதே இஸ்லாமிய முறை.

நமது சமூக காரியங்களும் பொதுஸ்தாபனங்களும் மட்டுமா ஸ்திரமாவதற்குப் பதிலாக, புகைந்து கொண்டும், ஆடிக்கொண்டும், கஷ்டப்பட்டு நடந்து கொண்டுமிருக்கின்றன? நம் சமூகத்தின் பொருளாதாரமும் அபிவிருத்தி அடைவதற்குப் பதிலாக மங்கிக் கொண்டுதானே இருக்கிறது!

தன் தன் ஜோலியும் சுயநலமும் மட்டும் இருந்து, கூட்டுறவு முயற்சிகளையும், வர்த்தக சங்கம் போன்ற, பாங்கி போன்ற, கூட்டுறவு ஏற்பாடுகளைச் சமயத்தில் செய்து கொள்ளாத சமூகங்கள் இனி நிலைக்க முடியாது. நம் நிலைமை உண்மையில் அதிக மோசமாக இருக்கிறது. ஆயினும். என்ன? நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுகாதாரம், அறநெறி ஆதாரம், ஆத்ம ஆதாரம், 'மறுமை ஆதாரம் அடையும் வழிகளை மட்டும் நமக்குக் கற்றுக் கொடுப்பதற்கு வரவில்லை. பொருளாதாரத்தையும் கற்றுத்தான் கொடுத்தார்கள். ஆயினும், அந்தப் பொருளாதாரத்தின் சில தத்துவங்களை மற்றவர்கள் 'அனுஷ்டித்துக் கொண்டிருக்க, நாம் கண்ணிருந்தும் குருடராக, குர்ஆன் ஹதீஸ் விஷயத்தில் செவிடர்களாக இருந்து வருகிறோம்.

அறியாமையினால் தவறுகள் செய்து நம் நிலைமையை எவ்வளவு கெடுத்து வைத்திருப்பினும், மனத்தையும் குணத்தையும் மாற்றிக் கொள்ள முன்வந்து, நபி காட்டிய வழியில் நிலையாக இருக்க நாம் துணிந்துவிடின், எத்தகைய கேடு கெட்ட நிலையிலிருந்தும் தலைதூக்கி

நிமிர்ந்துவிட முடியுமென்றுதான் குர்ஆனும் ஹதீஸும் சதா எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

எந்த அரபிகளை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அஞ்ஞானிகளாகவும் பிற்போக்காளர்களாகவுமிருந்த நிலைமையிலிருந்து ஞானிகளாகவும் முற்போக்காளர்களாகவும் மாற்றினார்களோ, அந்த அரபிகளை விட நாம் மோசமான நிலைக்கு வந்துவிடவில்லை. அதே நபிகள் (ஸல்) இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

மதீனாவில் உள்ள ரவுலா ஷரீபில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிரற்றவர்களாக இருந்து கொண்டில்லை. போட்டிருந்த சட்டையைக் கழற்றிப் போட்டு விட்டதுபோல், உலகில் இருக்கும்போது அவர்கள் அணிந்திருந்த சட்டையாகிய புனித உடலைத்தான் மதீனாவில் போட்டு விட்டு மறைந்தார்கள். அந்தப் புனித உடலை போர்த்தியிருந்த அப்புனிதப் போர்வையை ஸஹாபாக்கள் ரவ்லாவில் அடக்கம் செய்தார்களே தவிர, நபிகள் நாயகத்தை மண் குழியில் புதைத்து விடவில்லை. அன்று மதீனாவில் தீன் சுடர் கொளுத்திய வள்ளல், இன்றும் ஆத்ம லோகத்தில் இருந்து கொண்டு, உண்மை முஸ்லிம்கள் இருக்கும் ஒவ்வொரு ஊரையும் ஒரு மதீனாவாக, ஒரு ஹரம் ஆக அக்கினிப் பிரளயத்திலிருந்து தப்பிக்கக் கூடிய சுவனங்களாக மாற்றுவதற்கு முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆயினும், நாம் உண்மை முஸ்லிம்களாக இருக்கிறோமா என்பது தான் கேள்வி.

அந்த ரேடியோ இந்த ரேடியோக்களைக் கேட்டு ரசிக்க ஆரம்பித்து விட்டீர்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆத்ம லோகத்திலிருந்து பேசுவதைக் கேட்கக் கூடிய ரேடியோ உங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. அதன் அருமை தெரியாது. அதைக் கவனிக்காமலேயே இருந்து வருகிறீர்கள். கண்களைத் திறவுங்கள்! காதுகளைத் திறவுங்கள்! மனங்களைத்திறவுங்கள்! சிந்தித்துத் தெளிவுபெற முயற்சியுங்கள்! இன்றும் நபியின் குரலை நாம் கேட்க முடியும். அவர்களின் வழிகாட்டுதலைக் குர்ஆன், ஹதீஸ் எனும் ரேடியோவிலிருந்து செவியுற்று, அதுகொண்டு, எத்தகைய பிற்போக்கிலிருந்தும், அஞ்ஞான இருளிலிருந்தும் வெளியேறிவிட முடியுமென்பதை உணருங்கள்.



எழுதியவற்றில் குற்றம் குறை இருப்பின் மன்னித்து விட்டுச் சமூகம் திருந்தக்கூடிய, தீவிர முற்போக்கு அடையக்கூடிய வழிகள் பற்றி எழுதியிருப்பதில் கருத்துக்கள் இருப்பின் அவை பற்றி நன்கு சிந்தியுங்கள். காலச் சக்கரப் போக்கில், நம் சமூகம் திருந்தியே தீர வேண்டும்; அதுவும் துரிதத்தில்.

குருநாதர் முஹம்மது அலி (ரஹ்)யின் ஒரு செய்யுளுடன் இதை முடிக்கிறேன். அவர்கள் சமூக நிலை பற்றிக் கவலைப்படுகிறார்கள். சமூகம் முன்னேறாது மலைப்புக்கும் மயக்கத்துக்கும் ஆளாகிக் கொண்டிருப்பதைக் கண்டு மனம் புண்படுகிறார்கள். அப்பொழுது ஒரு கனவு ஏற்படுகிறது. முஸ்லிம்கள் திடீர் விழிப்பும் எழுச்சியும் அடைந்து, தக்பீர் முழக்கத்துடன், முன்னேற ஆரம்பிப்பதைக் கண்டு, மகிழ்ச்சி இதயத்தில் பொங்கும் நிலையில், விழிக்கிறார்கள். விழித்ததும் கண்ட கனவைக் கூறுகிறார்கள்:

''ராஹில்-ஹேன்-முஸல்மான்-பி-ஸத்-நஅரெயே-
தக்பீர்!''

''யெஹ்-காபிலா! யெஹ்-பாங்கெ தாரா-மேரே-
லியே-ஹே.''

இதோ முஸ்லீம்களின் ஒரு ஜமாஅத்-கோஷ்டி அணி வகுப்புடன்—தக்பீர் முழக்கத்துடன்—தனது லட்சியத்தை அடையும் வழியில் நடக்க ஆரம்பிக்கிறது! இந்த அரபு நாட்டின் ஒட்டகைப் படையல்லா எனக்குரியது! இந்த ஒட்டகைப் படையின் பாங்கே தரா என்னும் மணியோசையல்லவா எனக்குரியது!

அல்லாஹு அக்பர்!

அல்லாஹு அக்பர்!

அல்லாஹு அக்பர்!